என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

லண்டனில்
தரமான
பொருள்கள்
நிரு

June 2017

FREE ISSUE

தமிழர் லண்டன் தகவல்

London Tamil's Information

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

subara
THE SMART CHOICE
• Accident Protection
• Block Management
• Building Maintenance
• Critical Illness Cover
• Home Insurance
• Income Protection
• Landlord's Cover
• Life Insurance
• Recruitment
• Security Systems
• Utility Services
Ask our staff for more information
020 3823 1061
info@subara.co.uk
www.subara.co.uk
Subara Business Centre
4 Weald Lane
Harrow HA3 5ES

#1 Niru®

SINCE 1989

COCONUT MERCHANT

Niru NATURALS®

AQUA COCO

SURYAA

RUS-C

நிரு தரம் நிரந்தரம்

தமிழர் தகவல்
Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2048
சித்திரை
மலர் : 16
இதழ் : 167
ஜூன் - 2017

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!



வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 Chapel Road, West Ealing, London W13 9AE. Tel: 0208 810 0835 Fax: 0208 840 0485,
Email: info@ammanealing.org, web: www.ammanealing.org

இரதோற்சவ அருட்காட்சி (தேர்)-2017

CHARIOT FESTIVAL - 2017

கொடியேற்றம்

21-07-2017 வெள்ளி
காலை: 09:30 மணி

இரதோற்சவ அருட்காட்சி
(தேர்)

13-08-2017 ஞாயிறு
காலை: 10:00 மணி

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, London W13 9AE
தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org

மகோற்சவ விஞ்ஞாபனம் 2017

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் எனா, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் பதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே. - அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான விளம்பி வருடம் ஆடி மாதம் 5ம் நாள் 20-07-2017 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை (21-07-2017) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 13-08-2017 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 14-08-2017 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 16-08-2017 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

21-07-2017 முதல் 16-08-2017 வரை பூசை நேரம்

காலை	08:00	சங்கல்பம்	மாலை	05:00	சாயரட்சைப் பூசை
காலை	08:15	அபிஷேகம்	மாலை	05:30	ஸ்தம்ப பூசை
காலை	10:30	ஸ்தம்ப பூசை	மாலை	06:15	கலாசார நிகழ்வு
காலை	11:15	வசந்தமண்டப பூசை	இரவு	07:00	வசந்தமண்டப் பூசை
பகல்	12:30	மகா பிரசாதம்	இரவு	10:30	அர்த்தசாம பூசை

மகோற்சவ நிகழ்வுகள்

21/07/2017	வெள்ளி	கொடியேற்ற அருட்காட்சி காலை 9.30 மணி	04/08/2017	வெள்ளி	கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி
22/07/2017	சனி	இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி	05/08/2017	சனி	வசந்தோற்சவ அருட்காட்சி
23/07/2017	ஞாயிறு	கனகதாரா இலட்சுமி அருட்காட்சி	06/08/2017	ஞாயிறு	பக்தாலுக்கிரக அருட்காட்சி
24/07/2017	திங்கள்	நாகபூசணி அம்பாள் அருட்காட்சி	07/08/2017	திங்கள்	சந்தான பாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரதப் பவனி)
25/07/2017	செவ்வாய்	மீனாட்சி அம்பாள் அருட்காட்சி			
26/07/2017	புதன்	சரஸ்வதி வித்யா அருட்காட்சி	08/08/2017	செவ்வாய்	ஜோதி மங்கள அருட்காட்சி
27/07/2017	வியாழன்	அர்த்தநாதீஸ்வர அருட்காட்சி	09/08/2017	புதன்	ஓம்காரரூப தரிசன அருட்காட்சி
28/07/2017	வெள்ளி	கைலாச தரிசன அருட்காட்சி	10/08/2017	வியாழன்	மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி
29/07/2017	சனி	அன்னைபூர்ணாம்பிகை அருட்காட்சி	11/08/2017	வெள்ளி	வேட்டைத் திருவிழா
30/07/2017	ஞாயிறு	அபிராமி தரிசன அருட்காட்சி	12/08/2017	சனி	சகோர தர்சன அருட்காட்சி (சப்பரம்)
31/07/2017	திங்கள்	சௌபாக்கியா அம்பிகை அருட்காட்சி	13/08/2017	ஞாயிறு	இரதோற்சவ அருட்காட்சி (தேர்)காலை10.00மணி
01/08/2017	செவ்வாய்	காமாட்சி அம்பாள் அருட்காட்சி	14/08/2017	திங்கள்	தீர்த்த உற்சவம், அருட்காட்சி
02/08/2017	புதன்	அனந்தசயன அருட்காட்சி	15/08/2017	செவ்வாய்	பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல்
03/08/2017	வியாழன்	புஸ்பக விமான அருட்காட்சி	16/08/2017	புதன்	வைரவர் மடை

பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.

அன்னையின் சேவையில்

விழா உபயகாரர்களுடன்,

ஆலய நிர்வாக சபை, அறங்காவலர் சபை

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 Chapel Road, West Ealing, London W13 9AE
Telephone No.: 0208 810 0835 Fax: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org

MAHOTSAVAM (FESTIVAL) - 2017

Dear Devotees,

London Shri Kanagathurkkai Amman Temple annual Mahostsava festival will be celebrated for 27 days. Festival starts with Gnanapathy Hommam on 20/07/2017 evening and Flag hosting on 21/07/2017 at 9.30am. The Chariot festival is on 13/08/2017and festival ends with Vairavar madai on 16/08/2017.

FROM 21-07-2017 TO 16-08-2017 POOJA TIMES AS FOLLOWS:

Morning	08:00	Sankalpam	Evening	05:00	Sayaratsai Pooja
Morning	08:15	Abisekam	Evening	05:30	Sthampa Pooja
Morning	10:30	Sthampa Pooja	Evening	06:15	Cultural Programme
Morning	11:15	Vasantha Mandapa Pooja	Night	07:00	Vasantha Mandapa Pooja
Afternoon	12:30	Maha Pirasatham	Night	10:30	Arthasamapooja

MAHOTSAVA PROGRAMME

21/07/2017	Friday	**Flag Hoisting 9.30am**	04/08/2017	Friday	Ketharagowri Ampaal Appearance
22/07/2017	Saturday	Raja Rajeswari Appearance	05/08/2017	Saturday	Vasanthotsava Appearance
23/07/2017	Sunday	Kanagadhara Lakshmi Appearance	06/08/2017	Sunday	Pakthankraga Appearance
24/07/2017	Monday	Nagapooshani Appearance	07/08/2017	Monday	Santhanapakya Lakshmi Appearance Procession of Golden Chariot
25/07/2017	Tuesday	Meenadhi Appearance	08/08/2017	Tuesday	Jothi Mangala Appearance
26/07/2017	Wednesday	Saraswathy Vidhya Appearance	09/08/2017	Wednesday	Ongara Ruba Dharsana Appearance
27/07/2017	Thursday	Arthanatheeswar Appearance	10/08/2017	Thursday	Maha Dhurga Dharsana Appearance
28/07/2017	Friday	Kailaya Dharisana Appearance	11/08/2017	Friday	Hunting Festival Appearance
29/07/2017	Saturday	Annapoornampikai Appearance	12/08/2017	Saturday	Sakopura Dharsana Appearance
30/07/2017	Sunday	Abirami Dharisana Appearance	13/08/2017	Sunday	**Chariot Festival 10.00am**
31/07/2017	Monday	Shaupakiyambika Appearance	14/08/2017	Monday	Theerththa Vaari Appearance
01/08/2017	Tuesday	Kamadshi Appearance	15/08/2017	Tuesday	Poonkavam Festival Sangabisekam – Sakasdhira (1008)
02/08/2017	Wednesday	Ananthasayana Appearance	16/08/2016	Wednesday	Vairavar Madai
03/08/2017	Thursday	Pushpaka Vimana Appearance			

Devotees are expected to strictly adhere to Saiva principles during the festival season and abide by Temple rules.
Flowers, milk and coconut water offerings need to be made before the Abisekam.

All are welcome.

Festival Sponsors, Executive Committee & Trustees.

அம்பிகை அடியார்களே, தங்களின் பேருதவியினால் தாயகத்தில் 15 இல்லங்களில் 500 வரையான பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றார்கள். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்காக **£89,425.00** பவுண்களும் ஏனைய பணிகளுக்காக **£136,969.00** அனுப்பப்பட்டுள்ளது. ஆலய தொடக்க காலத்தில் இருந்து தாயகப் பணிக்கு **£2,299,361.00** அனுப்பப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பிள்ளைகளை எண்ணும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்! அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.! அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.!

தேர்த்திருவிழா அன்று அர்ச்சனைத் தட்டுக்கள் மூலம் கிடைக்கும் நிதியாவும் வழமைபோன்று தாயக கல்வி உள்ளிட்ட அவசர பணிக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

The money that is collected from the "Archanai Thatu" on Chariot festival day will be donated to Education project and welfare of our people in Srilanka

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உ

சிவமயம்

உயர்வாசற்குன்று முருகன் கோயில்

BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST

Registered Charity No: 269067

200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835 |Fax: 0208 482 6508

Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

மூன்றாவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தின் எட்டாவது மகோற்சவ விழா

பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 2017

முருகப்பெருமான் அடியார்களே!

இலண்டன் மாநகரில் மூத்த கோயிலாக அமைந்து விளங்கும் உயர்வாசற்குன்றிலே கோயில் கொண்டருள்புரியும் வள்ளி தேவசேனா சமேத முருகபெருமானின் கருணையினால் மேற்படி ஆலயத்தின் மகோற்சவ விழா நிகழும் ஏவிளம்பி ஆனிடு ஆனி மாதம 5ம் நாள் (19.06.2017) திங்கட்கிழமை காலை ரேவதி நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் கூடிய நன்னாளிலே கொடியேற்ற வைபவத்துடன் விழா தொடங்கி 14ம் நாள் (02.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலையிலே தேர்த்திருவிழாவும், 15ம் நாள் (03.07.2017) திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (04.07.2017) திருக்கல்யாண உற்சவத்துடன் விழா நிறைவுறுத திருவருள் கூடியுள்ளது.

20.06.2017 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 01.07.2017 சனிக்கிழமை வரை

காலை 08.15 மணி : சங்கல்பம்
காலை 08.30 மணி : அபிஷேகம்
காலை 09.45 மணி : பூஜை
காலை 10.30 மணி : கொடித்தம்ப பூஜை
காலை 11.15 மணி : வசந்தமண்டப பூஜை தொடர்ந்து திரு வீதியுலா
பகல் 12.30 மணி : மகா பிரசாதம்

மாலை 05.45 மணி : சாயரட்சைப் பூஜை
மாலை 06.45 மணி : கொடித்தம்ப பூஜை
மாலை 07.15 மணி : வசந்தமண்டப பூஜை தொடர்ந்து வீதியுலா
இரவு 09.30 மணி : மகாபிரசாதம்

மகோற்சவ நிகழ்வுகள்

18.06.2017	ஞாயிறு	காலை 09.30 மணி	- கணபதி ஹோமம் மாலை பூர்வாங்கக் கிரிகைகள்
19.06.2017	திங்கள்	காலை 11.30 மணி	- கொடியேற்ற வைபவம் மாலை திருவிழா
26.06.2017	திங்கள்	இரவு 07.45 மணி	- கைலாய வாகனம் புறப்பாடு
27.06.2017	செவ்வாய்	மாலை 06.00 மணி	- மாம்பழத்திருவிழா
28.06.2017	புதன்	மாலை 07.45 மணி	- மஞ்சம் புறப்பாடு
30.06.2017	வெள்ளி	காலை 05.00 மணி	- ஆனி உத்தரம்
30.06.2017	வெள்ளி	மாலை 06.00 மணி	- வேட்டைத்திருவிழா
01.07.2017	சனி	மாலை 07.45 மணி	- சப்பறம் புறப்பாடு
02.07.2017	ஞாயிறு	காலை 11.00 மணி	- சுவாமி தேரேறி வீதி உலா வருதல்
03.07.2107	திங்கள்	காலை 10.00 மணி	- தீர்த்தத் திருவிழா, இரவு 7.30 மணி கொடி இறக்கம்
04.07.2017	செவ்வாய்	இரவு 07.00 மணி	- திருக்கல்யாண உற்சவம் - பொது உபயம்
05.07.2017	புதன்	மாலை 07.00 மணி	- பைரவர் மடை

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாய் வருகை தந்து, ஆலய நடை முறைகளுக்கு அமைவாக வழிபாட்டிற் கலந்து கொண்டு புண்ணியப்பேறு பெறுவதுடன் தாயகத்தில் நிலையான சாந்தியும், சமாதானமும், அமைதியும் ஏற்படவும் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழவும் வழிபாடு செய்வோமாக.

குறிப்பு: இம்மகோற்சவ விசேட நாட்களில் பூஜை நேரத்தில் சிறு மாற்றம் ஏற்படும்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

ஆலய நிர்வாகம்

ஓ
சிவமயம்

உயர்வாசற்குன்று முருகன் கோயில்
BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST

Registered Charity No: 269067
200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835 |Fax: 0208 482 6508
Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

ANNUAL FESTIVAL– 2017

The Annual Festival of the Highgatehill Murugan Temple will commence on Monday 19th June 2017 with the flag hoisting ceremony and will conclude with the flag lowering ceremony on Monday 3rd July 2017. The Poongavanam (Thirukkalyaanam) festival will be held on Tuesday 4th July 2017 and Vairavar Madai on Wednesday 05th July 2017.

Daily Timing of Festival from Tuesday 20.06.17 to Saturday 01.07.2017

MORNING

08:30	Abishegam Commences
09:45	Pooja
10:30	Kodiththamba Pooja
11:15	Vasantha Mandapa Pooja followed by Veethi Ula
12:30	Evening: Day festival concludes

EVENING

17:45	Evening Pooja
18:45	Kodiththamba Pooja
19:15	Vasantha Mandapa Pooja followed by Veethi Ula
21:30	Evening festival concludes

Mahotsava Festival

18.06.2017	09:30 am	Ganapathy Homam
19.06.2017	11:30 am	Flag Hoisting Ceremony followed by the day festival
26.06.2017	07:45 pm	Kailaya Vaganam
27.06.2017	06:15 pm	Mambalath Thiruvila (Mango Festival)
28.06.2017	07:45 pm	Manjam
30.06.2017	05:00 am	Aani Uththaram
30.06.2017	06:00 pm	Vettai Thiruvila (Hunting Ceremony)
01.07.2017	07:45 pm	Sapparam
02.07.2017	11:00 am	Chariot Festival Chariot procession outside the Temple
03.07.2017	10:00 am	Theertham (Water Cutting Ceremony)
	07:30 pm	Kodi Irakkam (Flag Lowering Ceremony)
04.07.2017	07:00 pm	Poongavanam (Thirukkalyana Festival (Public Ubayam)
05.07.2017	07:00 pm	Vairavar Madai

Devotees are expected to strictly adhere to Saiva principles during the festival season, and abide by the Temple rules. The timings shown above may slightly deviate in special circumstances.

Temple Management

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

£99 மட்டுமே

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

15 மாதங்கள் £99 மட்டுமே

GTV | VIJAY | 2 தமிழ் | KTV | SUN | ஆதித்யா | SUN LIFE

MEGA TV | DEEPAM | கலைஞர் | JAYA TV | Raj | ஜீ தமிழ் | வேந்தர் | புதுயுகம் | THANTHI TV

45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

INCLUDED

TENTKOTTA

1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்

EROSNOW

6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்

7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்

Roku | tv | AirPlay | chromecast | amazon fireTV | kindle fire | XBOX

SUBSCRIBE NOW!

UNITED KINGDOM

0207 132 2727

Go Online

www.lycatv.tv

என் அன்பு இனியவர்களே...

லண்டனில் தமிழர் தகவல் கடந்த பதினாறு ஆண்டுகளாக பல்வகை இன்னல்கள்தாண்டி வெளிக்கொண்டுவரப்பட்டதை அறிவீர்கள். சொல்லவேண்டிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட காலங்களில் மனக் கசப்புகளும் வராமலில்லை. எனினும் என்னிடம் எவர்மேலும் எந்தச் காழ்ப்புணர்வுகளும் இல்லை. அவை சந்தர்ப்ப வெளிப்பாடுகளாகவே இருந்தன. நான் உண்மையானவர் அதனால் தற்போது பொருளாதாரத்தில் நலிந்துள்ளேன். உங்களிடம் உதவி கேட்கின்றேன்.

இதழைத் தொடர்ந்து நடத்த நிதிதேவை. ஆர்வமுள்ள அன்பர்களிடமிருந்து அன்பளிப்புகளை எதிர்பார்க்கிறேன். ஒரு நிரந்தவைப்பினூடாகப் பெறும் வருமானத்திலிருந்து இந்த இதழைப் தொடர்ந்து வெளியிட எண்ணுகிறேன்.

தங்கள் ஆதரவின் பலம்தான் இதன் எதிர்காலம்.

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB



– தென்கடல்சி கோ.சாமிநாதன்

எப்படி முடிவெடுப்பது?

அவசரப்பட்டு முடிவு எடுத்துட்டு அதுக்கப்புறம் அல்லாடுறவங்க நிறைய பேர் உண்டு இந்த உலகத்துலே.

"ஏன் இப்படி" ன்ன கேட்டா "ஆரம்பத்துலேயே கொஞ்சம் யோசிச்சுப் பார்த்திருக்கணும்... அதை நான் செய்யலே" ம்பாங்க.

எட்வர்டு. டி.போனான்னு ஒருத்தர்.

'Lateral thinking' அப்படிங்கறது சிந்தனையிலே ஒரு புதிய பாணி.

அந்த வார்த்தையை உருவாக்கினதே இவருதானாம்.

"முடிவு எடுப்பதற்குத் தேவை கற்பனைத் தொப்பிகள் ஆறு" அப்படிங்கறது அவருடைய பிரபலமான ஒரு கருத்து.

வாழ்க்கையிலே சரியான முடிவுகள் எடுக்கறத்துக்கு அவருடைய இந்தக் கருத்து ரொம்பவும் உபயோகமா இருக்கும்.

அது என்ன கற்பனைத் தொப்பிகள்?

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறையும் ஒன்றன்பின்



ஒன்றாக வரிசையா மாட்டிக்கொண்டுதான் முடிவெடுக்கணுமாம்.

முதல்லே வெள்ளைத் தொப்பி.

முடிவெடுக்கறத்துக்கு முதல் தேவை தகவல்கள்.

இந்தத் தகவல்களைத் திரட்டறதுதான் இந்தப் தொப்பியின் வேலை.

அடுத்தது பச்சைத் தொப்பி: இது கற்பனை சக்தி படைத்த தொப்பி... இது என்ன செய்யும்ன்னா... கிடைச்ச தகவல்களை வச்சி புதுப்புது ஐடியாக்களை உற்பத்தி செய்யும்.

அடுத்தது மஞ்சள் தொப்பி: இதோட வேலை என்னன்னா பச்சைத் தொப்பி கொடுத்த ஐடியாக்களில் எதெல்லாம் நடைமுறைக்குச் சரிப்பட்டு வரும்... ங்கறதை சரியாக இனம் கண்டு மற்ற ஐடியாக்களையெல்லாம் வடிகட்டும்.

இதுக்கு அடுத்தது கறுப்புத் தொப்பி.

இது நியாய தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி. நடக்கக்கூடிய, நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய ஐடியாவாக இருந்தாலும்... 'இது சமூகத்துக்குக் கேடானது' 'ஆபத்து' அப்படின்னு சில ஐடியாக்களைக் காட்டி இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

அடுத்தது சிவப்புத் தொப்பி: இந்தத் தொப்பிக்குத் தர்க்க அறிவு, தகவல் அறிவு பற்றியெல்லாம் தெரியாது.

'ஏதோ என் மனசுக்குப் படுது... இது சரியா வரும்' இப்படிச் சொல்லுவோம் இல்லையா இந்த உள்ளுணர்வு (Intutition) தான் இந்த சிவப்புத் தொப்பி.

கடைசியா நீலத் தொப்பி: மற்ற ஐந்து தொப்பிகள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து சரியான இறுதி முடிவு எடுக்கும் தொப்பி இது.

இதுதான் எட்வர்டு. டி. போனோவின் கருத்து.

இதை சுருக்கமா நாம எப்படிப் புரிஞ்சிக்கலாம்ன்னா இப்ப ஏதோ ஒரு விஷயத்துலே நாம முடிவெடுக்கணும்ன்னு வச்சிக்குங்களேன்.

முதல்லே அது சம்பந்தமான தகவல்களைத் திரட்டணும்.

அந்தத் தகவல்களை அடிப்படையா வச்சிக்கிட்டு புதுயோசனைகளை உருவாக்கணும்.

இதுலே உபயோகப்படாத யோசனைகளை ஒதுக்கணும். நடைமுறைக்குச் சாத்தியமான யோசனைகளை எடுத்துக்கணும்.

இது நமக்கு நல்லதுன்னு தோன்றினாலும் இதனாலே மத்தவங்களுக்கு ஏதும் இடைஞ்சல் இருக்குமான்னு பார்க்கணும்.

நம்ம உள்ளுணர்வு என்ன சொல்லுதுன்னு பார்க்கணும்.

கடைசியா இவ்வளவையும் அலசி ஆராய்ந்து ஒரு நல்ல முடிவுக்கு வரணும்.

இதுதான் அவரு சொல் அந்த ஆறு தொப்பிகள்.

இதுலே இன்னொரு விஷயம்.

சில சந்தர்ப்பங்கள்லே இப்படி வரிசையா பார்த்துக்கிட்டெல்லாம் இருக்க முடியாது.

உடனடியா முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உண்டு. கால்பந்தாட்டத்துலே... பந்தை உதைக்கறதா தடுக்கறதா? போர்க்களத்துலே... எதிரியை எப்படிச் சமாளிக்கறது? இதுமாதிரி சமயங்களிலே சிவப்புத் தொப்பி மட்டுமே போதும். அதாவது உள்ளுணர்வு. அது கூர்மையா இருக்கணும். அதுக்க மனசு தெளிவா இருக்க வேண்டியது அவசியம்.

"முடிவெடுக்கிற விஷயத்துலே நான் எப்பவும் தெளிவா இருப்பேன் சார்" அப்படின்னார் ஒருத்தர்.

"எப்படிங்க அது"? ன்னு கேட்டார் இன்னொருத்தர்.

"நேத்திக்கு ராத்திரி நான் தனியா நடந்து வந்துகிட்டிருந்ததேன். எதிரில் ஒரு திருடன் திடீர்னு வந்துட்டான். உடனே அந்த இடத்துலேயிருந்து ஓடறதா? இல்லே அவனை எதிர்த்துப் போராடறதா? இதைப்பத்தி யோசிச்சேன். உள்ளுணர்வு சொல்றபடி உடனே ஒரு முடிவு எடுத்துட்டேன்!" என்றார்.

"என்ன செஞ்சீங்க?" ன்னு கேட்டார் இவர்.

"பேசாமே கையிலே இருந்த பணைத்தையெல்லாம் அவன் கையிலே கொடுத்துட்டு... பொத்துன்னு அவன் கால்லேயே விழுந்துட்டேன்!"

அப்படின்னார்.

"இதுலே உபயோகப்படாத யோசனைகளை ஒதுக்கணும். நடைமுறைக்குச் சாத்தியமான யோசனைகளை எடுத்துக்கணும்."

சிவபுராணத்தின் அருமை, பெருமை பலருக்குத் தெரியவில்லை என்றே தோன்றுகிறது. இறுதிக் கிரியைகளிலே பாடும் பாட்டுத்தானே என்று பலர் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். இது மிகவும் வேதனை தருகிறது. திருவாசகம் மணிவாசகப்பெருமானால் அருளப்பட்டது. தில்லையிலே நடனமிடும் இறைவனால் எழுதப்பட்டது என்று திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது. அந்தத் திருவாசகத்தின் முதற் திருப்பாட்டே சிவபுராணம். இதை ஓதுவதால் மன அமைதி கிடைக்கும். திருவாசகம் தமிழர் அல்லாத வேற்று இனத்தவர்களின் மனத்தையும் உருக்கியிருக்கிறது என்று வரலாறுகள் உள. அவை உண்மையா, பொய்யா என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டா. நாம் இறைபத்தியுடன் ஓதும்போது அந்த உணர்வு நமக்கு வருவதே போதுமான சான்றல்லவா?

இனி, சிவபுராணத்தில் வரும் முக்கியமான நான்கு அடிகளை நோக்குவோம்.

முதலாவது அடி, 'நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க' என்றும்,

பதினெட்டாவது அடி, 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்றும்

முப்பதாவது அடி, 'செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்' என்றும்

ஐம்பத்தொன்பதாவது அடி, 'நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காஅட்டி' என்றும் வருகின்றன வரவேண்டும். இவற்றிலே வாழ்க, செல்லாஅ, காஅட்டி என்பவற்றில் 'அ' என்ற உயிரெழுத்து வருவதால் உயிரளபெடை என்போம். அதுபோல, வணங்ங்கி என்றதில் 'ங்' என்ற மெய்யெழுத்து (ஒற்றெழுத்து) வருதலால் அது ஒற்றளபெடையாகும். இப்படி இந்தச் சொற்கள் நீண்டு, அளபெடையாக வரவேண்டியதன் காரணம் என்ன?

கவிதைகளிலே ஓசை நயத்துக்காகவும் இலக்கணத்துக்காகவும் அளபெடைகள் பயன்படுத்தப் படுகின்றன. திருக்குறளிலே பல இடங்களில் அளபெடைகள் வருவதைக் காணலாம்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

2 5

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்

4 8

திருக்குறள் வெண்பா என்ற பாவகையைச் சேர்ந்தது. சிவபுராணமும் வெண்பா வகையைச் சேர்ந்தது. சிவபுராணத்தைக் கலிவெண்பா என்று சொல்வர். வெண்பாவில் மூன்று முக்கிய அம்சங்களைப் பார்க்கலாம்.

1. ஈற்றடியில் மூன்று சீர்கள் மட்டுமே இருக்கும்.

2. கடைசிச் சீர் காசு, நாள், மலர், பிறப்பு என்ற நான்கு வகைகளில் ஏதாவது

ஒரு அமைப்பில் இருக்கும்.

3. பாடலில் வெண்தளை மட்டுமே இருக்கும்.

சிவபுராணத்திலே ஈற்றடி,'பல்லோரும் ஏத்தப் பணிந்து' என்று இருக்கிறது. இந்த அடியில் மூன்று சீர்கள் உள்ளன. கடைசியாக உள்ள சீர் பணிந்து, பிறப்பு என்ற அமைப்பில் இருக்கிறது. எனவே சிவபுராணம் வெண்பா என்பதை உறுதி செய்யலாம்.. சிவபுராணம் கலிவெண்பா வகையைச் சார்கிறது. இனி, சிவபுராணத்திலே மேலே குறிப்பிட்டுள்ள அளபெடைகள் வருவதற்கான காரணத்தைப் பார்க்கலாம். அதற்கு முதலில் சீர், தளை, வெண்டளை போன்ற பதங்களை விளங்குதல் அவசியம்.

அவனருளாலே அவன்தாள் 'வணங்கி' யாஅ 'வணங்குங்கி' யாஅ

ஒரு பாடலின் வரியில் உள்ள சொற்பிரிவுகளைச் 'சீர்' என்பர். அகர முதல எழுத்தெல்லாம் ஆதி என்ற திருக்குறள் வரியில் அகர என்பது ஒரு சீர். முதல என்பது ஒரு சீர். எழுத்தெல்லாம் என்பது ஒரு சீர். ஆதி என்பது ஒரு சீர். ஆக, அந்த வரியில் நான்கு சீர்கள் உள்ளன.

சீர்களைப் பிரித்தால் அவற்றை அசை என்று சொல்வர். வெண்பாவில் வரும் சீர்கள் இரு வகைப்படும். அவையாவன,ஈரசைச்சீர், மூவசைச்சீர் ஆகும். இரு அசை உள்ளவை ஈரசைச்சிர். மூன்று அசைகள் உள்ளவை மூவசைச்சீர். பாலும் தெளிதேனும் என்ற வெண்பாவிலே பாலும், பாகும், நாலும், துங்;க, சங்க என்பவை ஈரசைச்சீர்கள். தெளிதேனும், பருப்புமிவை, கலந்துனக்கு, நான்தருவேன், கரிமுகத்து, தூமணியே, நீயெனக்கு, தமிழ்மூன்றும் ஆகியவை மூவசைச்சீர்கள்.

சீரமைப்புக்கு ஒரு வாய்பாடு உண்டு. ஈரசைச்சீர்கள் தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என நால்வகைப்படும். அதுபோல, மூவசைச்சீர்கள் தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் என நால்வகைப்படும். உதாரணங்கள்:

தேமா: பாலும், தேனும், பாகும்

புளிமா: குழையும், பயனும், ஒழுக்கி

கூவிளம்: அந்தணன், நீந்துவர், மாசிலன்

கருவிளம்: மலர்மிசை, நிலமிசை, உலகெனின்

தேமாங்காய்: நாதன்தாள்

புளிமாங்காய்: கெடுத்தாண்ட

கூவிளங்காய் : சங்கமத்துள்

கருவிளங்காய் : இமைப்பொழுதும்

இனி, தளையைப் பார்க்கலாம். தளை என்பது சொற்களிலே புணர்ச்சிபோல, சீர்களின் புணர்ச்சியாகும். வெண்பாவில் வெண்தளைதான் வரவேண்டும். கலித்தளை வராது. வெண்தளைக்கு ஒரு சூத்திரம் உண்டு.

மாமுன் நிரையும் விளம்முன் நேரும்

காய்முன் நேரும் வருவது வெண்டளை.

முதற் சீர் மா அசையில் முடிந்தால் அடுத்து வருவது நிரையசையாக இருக்கவேண்டும்.

முதற் சீர் விளம் என்ற அசையில் முடிந்தால் தொடர்வது நேரசையாக வரவேண்டும்

முதற்சீர் காய் என்ற அசையில் முடிந்தால் தொடர்வது நேரசையாக வரவேண்டும்.

சிவபுராணத்திலே முதல் வரியில் நமச்சிவாய என்ற சீர் கருவிளங்காய் என்ற அமைப்பில் உள்ளது. வாழ்க என்று அடுத்த சீர் வந்தால் அது தேமா என்ற சீரமைப்பை உடையதாக இருக்கும். எனவே மூன்றாவது சீர் நாதன்தாள் என்று வர இயலாது. நாதன்தாள் என்று இருக்கவேண்டுமானால் முதலுள்ள சீர் மாவில் முடியாமல், விளத்திலோ, காயிலோதான் முடியவேண்டும். வாஅழ்க என்பது தேமாங்காய் என்று காயில் முடிகிறது. எனவே இலக்கணம் தப்பித்துக்கொள்கிறது.

'செல்லாஅ நின்றவித்' என்ற தொடரில் செல்லா என்று மட்டும் இருந்தால் அது தேமா என்று அமையும். அடுத்து வரும் சீர் நின்றவித் கூவிளம். செல்லாஅ என்றால் தேமாங்காய் என்று காய்ச்சீர் வரலால் நேரசை அடுத்து வருகிறது. அதுபோலவே 'நீழ்கழல்கள் காஅட்டி' என்ற தொடரில் காட்டி என்று தேமாச் சீர் வந்திருந்தால் அடுத்த வரியில் நாயிற் கடையாய் என்று தேமா வர இயலாது. இலக்கணம் இடிக்கும்.

அதுபோலவே வணங்கி என்பது புளிமா. வாய்பாட்டில் வரும் மாச்சீரில் வணங்கி என்று முடிந்தால், அடுத்த வரி சிந்தை மகிழ என்று தேமாச் சீரிலே தொடங்க இயலாது. மாறாக, வணங்ங்கி என்று வருமிடத்து மட்டுமே, வண ங்ங் கி, புளிமாங்காய் என்ற அமைப்பில் வந்து வெண்டளை இலக்கணத்தைக் காப்பாற்றும். இதுதான் இரண்டு ங் வருவதன் இரகசியம்.

தருமபுர ஆதீனம் 1998இன் பின் பதித்த பதிப்பிலும், மறுவன்புலவு திரு கணபதிப்பிள்ளை ஆசிரியர் பதிப்பித்த திருமுறைத்திரட்டு நூலிலும் 'வணங்ங்கி' என்றே உள்ளது. அது தவிர, திருத்தொண்டர் புராணத்துக்கு திரு சுப்பிரமணிய முதலியார் எழுதிய உரையிலும் திருவாசகத்தை மேற்கோள் காட்டும் இடத்தில், 'அவனருளாலே அவன்றாள் வணங்ங்கி' என்றே எழுதியுள்ளார். அந்தப்

பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

ஆகவே, சிவபுராணத்திலே,

முதலாவது அடி,'நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க'என்றே வரவேண்டும்.

பதினெட்டாவது அடி,'அவனருளாலே அவன்தாள் வணங்கி'என்றே வரவேண்டும்.

முப்பதாவது அடி,'செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்'என்றே வரவேண்டும்.

ஐம்பத்தொன்பதாவது அடி,'நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காஅட்டி'என்றே வரவேண்டும்.

சில புத்தகங்களிலே இப்படி இல்லாமைக்குக் காரணம், இலக்கணம் தெரியாதவர்கள் நூலைப் பதிப்பிக்கும்போது இவைகளை எழுத்துப்பிழைகள் எனக்கருதி, அவற்றை மாற்றியோ, தவிர்த்தோ பிரசுரித்திருக்கலாம்.

இறைவர் தம் இயல்பானே மலமற்றவர் என்றதனால் பசுக்களாகிய நாம் மலத்தாற் கட்டுண்டவர் என்றும், மலம் அறுத்தால் இறைவனை அடையலாம் என்றும், அறுத்தல் நின்மலனாகிய அவனால் ஆவதென்றும், அதற்கு அவனை நினைந்து ஏத்தியடைவதே உபாயம் என்றும் அறியும் எண்ணம் நின்மலன் என்ற ஒரு சொல்லாலே காணவைத்தார். அருளி "அவனருளாலே அவன்றான் வணங்கி"(திருவா) அவனை நினைத்தற்கும் அவனே அருளவேண்டும்.

ஊ மு சுப்பிரமணிய முதலியார் உரை. திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர் புராணம், பக்கம் 284

சிவபுராணத்தை ஓதுகின்றவர்கள் பல பிழைவிடுகின்றார்கள். பிழைகளை விட (தவிர்க்க) மாட்டேன் என்கிறார்கள். 'யாவையுமாய் அல்லையுமாம்'என்ற வரியை 'யாவையுமாம்; அல்லையுமாம்'என்று பாடுகிறார்கள். வேறு தவறுகளும் உள. அவற்றைப் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளேன். சிவபுராணத்திலே தொடங்கி இப்பொழுது திருவெம்பாவை வரை வந்துள்ள இன்னொரு விடயம்,'தொல்லை இரும்பிறவி'என்ற பாடலை முதலிலும் முடிவிலும் பாடுவது. திருவாசகம் ஒரு புனிதமான தெய்வீக நூல். அதை அருளிய மணிவாசகர் எந்தக் காப்புச் செய்யுளையும் ஓதவில்லை. நேரே, நமச்சிவாய என்ற இறைநாமத்துடனே ஆரம்பிக்கிறார். எனவே, காப்புச் செய்யுள் அல்லாத ஒன்றைப் பாடுவது அழகன்று, தவறு என்று பல காரணங்கள் காட்டியும் ஏற்பாரைக் காணவில்லை.

தொல்லை இரும்பிறவியை ஏன் பாடவேண்டும் என்பதற்கு அவர்கள் கூறுங் காரணங்கள்,

1. நான் பாடசாலையிலே படிக்கும்போது ஆசிரியர் அப்படித்தான் சொல்லித்தந்தார்.

2. ஊரிலே பல வருடங்களாக இப்படித்தான் பாடி வருகிறோம்

3. அதைப் பாடுவதால் என்ன தவறு?

4. எங்கள் ஊரிலே அப்படித்தான் பாடுவார்கள்.

5. திருவாசகத்தின் புகழைத்தானே அப்பாட்டுச் சொல்கிறது.

என்பவை.

பாடவேண்டும் என்பவர்கள் இந்த வலிமையற்ற காரணங்களைக் காட்டுகிறார்களேயன்றி வலுவான காரணம் என்று எதையும் சொல்வாரில்லை. இதுவரைகாலமும் காரணம் தெரியாமலே பாடிவந்தோம் என்பதற்காக, நாம் அதே பிழையைப் பிழையென்று தெரிந்த பின்னரும் தொடர்ந்து செய்யவேண்டுமா? தொல்லைதரும் பாடலைப் பாடவேண்டுமா?

நன்றி:

கலசம் [ஸ்ரீல முன்னேற்றச் சங்க ஆன்மிகக் காலாண்டிதழ்]

மரபை மீட்டெடுக்கும் தூரிகை

— என். கௌரி

முக்கியமான சமகால ஓவியர்களில் ஒருவர் வீரசந்தானம். ஓவியராக மட்டுமல்லாமல் தேசிய விருதுபெற்ற ஆடை வடிவமைப்பாளர், சமூகப் போராளி, நடிகர் என இவருக்குப் பன்முக அடையாளங்கள் இருக்கின்றன. இவரது அரை நூற்றாண்டு ஓவியப் பயணத்தைப் பின்னோக்கிப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது சென்னை தக்ஷிண் சித்ரா.



'வீரசந்தானம் பின்னோக்கில் ஓர் ஓவியக் காட்சி' (A Retrospective Exhibition) என்ற தலைப்பில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக் காட்சியில் இவருடைய அறுபது ஓவியங்கள் இடம்பெற்றிருக்கின்றன. வரிஜா ஆர்ட் கேலரியில் மார்ச் 19 அன்று தொடங்கிய இந்தக் காட்சி மே 31 வரை நடைபெறுகிறது.

ஓராண்டுக்கு மேலாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த வீரசந்தானம் சமீபத்தில்தான் அதிலிருந்து மீண்டுவந்திருக்கிறார். இந்தக் காட்சி அவருக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது.

அவரது பேச்சில் அந்த உற்சாகம் தெரிகிறது. "மரபு சார்ந்த ஓவியங்களின் மூலமாகவே என் உணர்வுகளை, உள்ளெழுச்சிகளை ஆழமாக வெளிப்படுத்த முடிகிறது. அதனால், அது சம்பந்தமாகத் தொடர்ச்சியாக ஆய்வு செய்து என் ஓவியங்களை முன்னெடுத்துச் செல்கிறேன். அதற்காகத் தமிழ்நாடு முழுவதும் மீண்டும் சுற்றிவர இருக்கிறேன். மீண்டும் வரையத் தொடங்கவில்லையென்றால் உடல்நிலை தேற இன்னும் நாளாகியிருக்கும்" என்று சொல்லிப் புன்னகைக்கிறார் வீர சந்தானம்.

இந்த ஓவியக் காட்சியில் வீரசந்தானம் கல்லூரி காலத்தில் வரைந்த ஓவியங்கள் முதல் சமீபத்தில் வரைந்த ஓவியங்கள் வரை இடம்பெற்றிருக்கின்றன. இவை எல்லாமே மரபு சார்ந்த கலைகளின் மீதான இவரது காதலைப் பெரிய அளவில் வெளிப்படுத்துகின்றன. தோற்பாவைக்கூத்து, தொன்மையான இசைக்கருவிகள், கோயில் சிற்பங்கள், ஓவியங்கள், நிகழ்த்து கலைகள் போன்றவை இவருடைய ஓவியங்களின் பேசுபொருள்களாக உள்ளன.

இவர் சமீபத்தில் வரைந்த ஓவியங்களில் இசைக் கருவிகளின் தாக்கம் அதிகமாகத் தெரிகிறது. இந்த ஓவியங்களின் வண்ணங்களும், கோடுகளும் முன்பைவிட ஆழமானதாகவும், உறுதியானதாகவும் மாறியிருக்கின்றன. மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டு யாழ் போன்ற யாழிசைக் கருவிகளின் கம்பீரமான அழகை இவரது ஓவியங்கள் பறைசாற்றுகின்றன. "யாழிசைக்கும் பாணர்கள் நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகம் முழுவதும் யாழ் கருவியை இசைத்துப் பரப்பிவந்தார்கள். யாழ்தேவிக்குக் கோயில் இருந்ததாகவும், பின்னாளில் அது காணக் கிடைக்காமல் போய்விட்டதாகவும் ஒரு செய்தி

இருக்கிறது. எனவே அச்சில் இருந்த யாழ் ஓவியங்களை அருங்காட்சியகம், நூலகம் போன்றவற்றில் தேடிப் பார்த்து, படித்துத் தெரிந்து கொண்டு அவற்றை ஓவியங்களாக்கினேன். திருவாரூர் கோயிலில் இருக்கும் தோற்கருவியான பஞ்சமுக வாத்தியத்தையும் என் ஓவியத்தில் கொண்டுவந்திருக்கிறேன். தற்போது, பறையாட்டத்தின் பல கூறுகளை ஓவியங்களாக்க முயன்றுவருகிறேன்" என்கிறார் அவர்.

இசைக் கருவிகளைப் போலவே காமதேனு தலைப்பில் இடம்பெற்றிருந்த ஓவியங்களும், ஜல்லிக்கட்டு ஓவியமும்

இந்தக் காட்சியின் முக்கிய அம்சங்கள். தேவைப்படும்போது இவரது தூரிகை அரசியல் பேசத் தயங்கியதே இல்லை. அப்படித்தான், ஜல்லிக்கட்டுக்கான தடையை எதிர்த்து ஜல்லிக்கட்டு ஓவியத்தை வரைந்திருக்கிறார். "இந்தக் காமதேனு, புலிக்குட்டிக்குப் பால் கொடுக்கும் ஓவியம் தனிப்பட்ட முறையில் என் மனதுக்குப் பிடித்த ஓவியம். எந்தக் கலையாக இருந்தாலும் மானுட மேம்பாட்டுக்காகப் படைக்கப்பட வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதை நோக்கித்தான் என் பயணம்" என்கிறார் வீரசந்தானம்.

இந்த ஓவியக் காட்சியின் ஒரு பகுதியாக வீரசந்தானத்தின் கலைப் பயணத்தை அலசும் ஒரு புத்தகமும், 'காமதேனு' என்ற ஆவணப்படமும் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஆவணப்படத்தை ஓவியர் கீதா இயக்கியிருக்கிறார். இந்தப் படம் வீரசந்தானத்தின் வாழ்க்கைப் பயணத்தையும், அவரது பன்முக ஆளுமையையும் அழுத்தமாகப் பதிவுசெய்கிறது.

■

சமீரா மீரான்

மூப்பும் பிணியும்

அன்பு மகளின்
அருமை மகளே!



பிறருக்கு உதவுவதும், பிறர் மானம் போற்றுவதும் சிறந்ததொரு மனிதப் பண்பு என்றேனே, நினைவு இருக்கிறதா, உனக்கு?

அந்தப் 'பிறர்' என்பவர், முகம் தெரியாத ஒருவராகவோ அப்போதுதான் அறிமுகமானவராகவோ, நம் உறவு நட்பு வட்டத்தில் இல்லாத யாரோ ஒருவராகவோ இருக்கலாம். அவர் நம் குருதி உறவாகவோ, கொள்கை உறவாகவோ, சொந்த உறவாகவோ, வந்த உறவாகவோக்கூட இரக்கலாம். (குருதி உறவு, கொள்கை உறவு, சொந்த உறவு, வந்த உறவு பற்றியெல்லாம் விரிவாக பிறகு எழுதுகிறேன்.)

உதவிக்காக ஏங்குபவர் எவராக இருந்தாலும் அவருக்கு உதவ நம்மால் முடியுமென்றால் உதவும் வாய்ப்பை நழுவவிடக்கூடாது.

தாய்க்குப் பிள்ளைகள் உதவலாம், பிள்ளைகளுக்குத் தாய் உதவலாம். அதுபோன்றே தந்தைக்கு மகனும், மகனுக்குத் தந்தையும், கணவன் மனைவிக்கும்; மனைவி கணவனுக்கும் உதவலாம்... என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

'இது என்ன வேடிக்கையாக இருக்கிறது? பிறருக்கு உதவுவது சரி, உறவுகள் ஒரவருக்கு ஒருவர் துணையாக இருக்க வேண்டியது கடமையல்லவா? அதை எப்படி உதவி என்று சொல்ல முடியும்? என்று இரக்கமும் ஈரமும் கொண்ட உன் தாய் ஒருநாள் கேட்டாள்.

'தந்தை மகற்காற்றும் நன்றி', 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி' என்றெல்லாம் வள்ளுவர் அப்போதே சொல்லியிருக்கிறார் என்று உன் தாய்க்கு விளக்கம் சொல்ல விரும்பினாலும், நிகழ்கால நடைமுறைகளை அவள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக வேறு விதமாக பதிலளித்தேன்.

'இப்போதெல்லாம் இவற்றைக் கடமையாகப் பலர் கருதுவது இல்லையம்மா!' என்றேன், நான்.

மேலும் அவளிடம் சொன்னேன்

'பணம் தேடி ஓடும் பரபரப்பான இன்றைய வாழ்க்கைச் சூழலில் உறவுகளுக்குத் துணையாக இருக்கவேண்டிய கடமைகளைச் செய்பவர்கள் மிகவும் அரிதாகவே நமக்குத் தெரிகிறார்கள்.

என் தங்கமகளின் தமிழ் மகளே!

தீராத நோயும் தேடிவரும் மூப்பும் எந்த மனிதரையும், 'ஆதரிப்பார் யாருமில்லையா? என ஏங்க வைக்கும். ஆனால் நம்மில் பலர் அவர்களின் அந்த ஏக்கத்தைக் கண்டும் காணாமல் இரக்கிறார்கள்.

முதியோர் பலரையும் இன்று பற்றிக்கொள்ளும் கொடுமை, பெற்ற பிள்ளைகளாலேயே புறக்கணிக்கப்படுவது.

அந்தக் கொடுமையின் உச்ச கட்டம்தான்

பிள்ளைகளால் புறக்கணிக்கபடும் தாயும் தந்தையும் முதியோர் இல்லத்தில்;

கணவனால் கைவிடப்படும் பெண்கள் அபலைகள் இல்லத்தில்;

பெற்றோரால் தூக்கி எறியப்பட்ட பிள்ளைகள் அனாதை இல்லத்தில்.

உறவுகளைக் காப்பது கடமை என்று ஒவ்வொருவரும் நினைத்தால் இதுபோன்ற இல்லங்களுக்குத் தேவை இருக்காது.' என்று நான் சொன்னதை உன் தாய் அமைதியாகக் கேட்டுக் கொண்டாள்.

என் மகளின் மகளே!

'முந்நூறு நாள் மடி சுமந்து பெற்றெடுத்தோம். முப்பது வருடம் கழித்துத் தத்துக் கொடுக்கிறார்கள் எங்களை முதியோர் இல்லத்திற்கு' என்று அன்னையர் பலர் வருந்தும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்துதான் வருகிறது.

அன்னையருக்கு மட்டுமல்ல,

தந்தையருக்கும் இதுதான் நிலை.

சேலத்திலிருந்நது ஒரு கவிஞர், எண்பது வயதைத் தாண்டியவர், காலில் அடிபட்டு நடக்க முடியாமல் முடங்கிப் போனவர், தொலைபேசியில் ஒருநாள் என்னை அழைத்துக் கதறினார்.

'அய்யா, என் ஒரே பையனும் அவன் மனைவியும் என்னைக் கவனிப்பதே இல்லை. எனக்கிருந்த கொஞ்ச சொத்துக்களையும் எழுதி வாங்கிவிட்டார்கள். எனக்கு உணவு தருவதற்குக் கூட இங்கே யாருமில்லை.

தாயைத் தவிக்கச் செய்வோர் தாயின் அருமையைப் புரியாத தன்னலவாதிகள் ஆனால், தான் பெற்று வளர்த்தவர்கள் தன்னலம் உடையவர்களாக இருந்தாலும் அவர்களின் நலமும் வளமும் மகிழ்ச்சியும் விரும்புகிறவள் தாய் மட்டும்தான்.

என் மனைவி இறந்த பிறகு, நான் இங்கே ஒரு அனாதையாகவே கிடக்கிறேன்' என்று அவர் சொன்னதைக் கேட்டபோது நானும் அழுதுவிட்டேன்.

தோளிலும் நெஞ்சிலும் சுமந்து திரிந்த உன் தந்தைக்கு வலிகளை மட்டுமே பதிலுக்குத் தர நீ நினைப்பாயா?

நீ நினைக்க மாட்டாய்! எனக்குத் தெரியும். ஆனால் அப்படி நினைக்கும் பிள்ளைகளும் இப்போது இருக்கிறார்களே, என்ன செய்வது?

உன் காலத்திலாவது உறவுகள் உயிருடன் இருந்தும் உதவ ஆளில்லாமல் தவிக்கும் தந்தையரும் அன்னையரும் இல்லை என்னும் நிலை வரவேண்டும்.

தாயைத் தவிக்கச் செய்வோர் தாயின் அருமையைப் புரியாத தன்னலவாதிகள் ஆனால், தான் பெற்று வளர்த்தவர்கள் தன்னலம் உடையவர்களாக இருந்தாலும் அவர்களின் நலமும் வளமும் மகிழ்ச்சியும் விரும்புகிறவள் தாய் மட்டும்தான்.

நீ உன் தாயை ஒருநாளும் மறக்கமாட்டாய் என்றாலும் உனக்கு நான் நினைவுபடுத்த ஒன்றுண்டு. அன்னையர் தினத்தன்று மறவாமல் உன் தாய்க்கு நன்றி கூறி அவளுடைய வாழ்த்துகளைப் பெற்றுக்கொள்.

உயிரை வருத்தி

உயிர் தந்தவள்

உதிரம் பெருக்கி

உருவம் தந்தவள்

உடல் வருத்தி

உணவு கொடுத்தவள் தன்

உறக்கம் மறந்து

உறங்கச் செய்தவள் நாம்

உலகம் அறிய

உயிரையும் தருபவள்

தாய்!

என்று ஒரு கவிஞன் சொன்னதுபோல் எல்லா பெருமைகளுக்கும் சொந்தமானவள் தாய்

வைகையில் ஊர் முழுக

வல்லூறும் சேர்ந்தழுக

கைப்பிடியாக் கூட்டி வந்து

கரைசேர்த்து விட்டவளே!

எனக்கொண்ணு ஆனதுன்னா

ஒனக்குவேற பிள்ளையுண்டு

ஒனக்கேதும் ஆனதுன்னா

எனக்குவேற தாயிருக்கா?

எம் தலைமுறைக் கவிஞர் வைரமுத்து தன் தாயை நினைத்து எழுதிய வரிகள் இவை.

சூரியன் ஒளியையும் தருகிறது வெப்பத்தையும் தருகிறது; என்றேனும் ஒரு நாள் அதிக வெப்பமாக இருக்கும்போது நாம் சூரியனை சினந்துகொள்கிறோம். எத்தனை கடுமையாக இருக்கிறது இந்த வெயில் என்று, ஆனால் அதே சூரியன்தான் நமக்கு வெளிச்சத்தையும் தருகிறது. சூரியன் தரும் வெப்பத்தை விட வெளிச்சம் நமக்கும் மிகவும் தேவையானது. அந்த வெளிச்சம் இல்லாமல் போனால், உலகமே இருண்டு போகுமே! இதை உணர்ந்தால் சூரியனின் சூட்டை நம்மால் சகித்துக்கொள்ள முடியும்.

அப்படித்தான் நம் தாய் தந்தையரும். மூப்பும் பிணியும் அவர்களை அணுகும்போது அவர்கள் நமக்கு சுமையாகத் தெரிகிறார்கள். ஆனால், நாம் இன்று வாழும் சுகமான வாழ்வு அவர்கள் தந்தது என்பதை நினைத்துப் பார்த்தால், அவர்கள் நமக்கு சுமையாக இருக்கமாட்டார்கள்.

முதுமையும் நோயும் தாய் தந்தையரை தள்ளாடச் செய்யும்போது அவர்களைத் தாங்கிப் பிடிக்கவேண்டும் என்ற கடமை உணர்வு எல்லோரிடமும் இருப்பதில்லை. இன்று சிலர் ஒருவரை ஒருவர் தாங்கிப் பிடிக்க நினைப்பது அவர்கள் உள்ளத்தில் தானாகவே உருவாகும் அடுத்தவருக்கு உதவும் நல்ல எண்ணத்தில்னால்தான். அவர்களால்தான், மனிதநேயம் இன்னும் மரணிக்காமல் இருக்கிறது. மனிதம் மாறாமல் தன் உறவுகளைப் பேணும் சில நல்லவர்களைப் பற்றியும் வரும் மடல்களில் எழுதுகிறேன்.

இன்னும் சொல்வேன்!

உன் அன்புத் தாத்தா.

இலங்கை நீர்கொழும்பு வயோதிபர் இல்லத்திற்கு நிதி சேர்த்தல்

ஆதரவற்ற, கைவிடப்பட்ட வயோதிபர்களைப் பராமரிப்பதற்கு இல 100 கடற்கரை தெரு, நீர் கொழும்பு இலங்கையில் இலவச வயோதிபர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை ஆரம்பிக்க உள்ளது. இதற்கு இலங்கை ரூ 40 மல்லியன் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் 60 முதியோர்கள், அதன் பின்பு அதிகரிக்க உள்ளோம்.

இச்சபை, இல 201/1 மகாவத்தை கொழும்பு 14இல் கடந்த 40 வருடங்களாக "அன்பு இல்லம்" என்ற பெயரில் இலவச வயோதிபர் இல்லம் ஒன்றை நாடாத்தி வருகிறது. இங்கே தற்பொழுது பல இன மதங்களைச் சேர்ந்த ஆண், பெண் முதியோர் 60 பேர் பராமரிக்கப்படுகின்றனர். கடவுளின் கிருபையால் கருணை உள்ளம் படைத்தோர் நன்கொடையில் இவர்களின் லௌகீக, ஆத்மீக தேவைகளை சிறப்பாக கவனித்து வருகிறோம்.

நீர்கொழும்பில் புதிய வயோதிபர் இல்லம் ஒன்றை ஆரம்பிப்பதன் நோக்கம் இங்கே ஆதரவின்றி கைவிடப்பட்டு கஷ்டப்படும் வயோதிபர்கள் பலர் உள்ளனர். இவர்கள் மீது அனுதாபம் கொண்டு உதவ விரும்புவோர், கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியாஸ்திரிகள் சபை கடந்த 90 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் சேவையாற்றி வருகிறது. அதன் தலைமையின் வழிகாட்டலில் தற்பொழுது 41 கன்னியாஸ்திரி மடங்கள், 23 பாடசாலைகள், 20 இளைஞர் இல்லங்கள் இன்னும் பாலர்கள், முதியோர்கள் இல்லங்களையும் நடத்தி வருகிறது. மக்கள் சேவையே அதன் இலட்சியம், மேலதிக விபரம் வேண்டுவோர் கீழே ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள கன்னியாஸ்திரிகளைத் தொடர்பு கொள்ளவும்.



Request for Funds to Elders Home in Negombo, Sri Lanks

Apoatobic Carmel Sisters in Sri Lanka are about to start a Charitable Elders House at No. 100, Sea Street, Negombo, Sri Lanka for the benefits of deserted and destitute elders. This is our Second Project costing SL. Rs. 40 Million to accommodate 60 Elders at the start and to increase the number later.

Our First Project for Elders, under the name "Home of Compassion" has been functioning at No. 201/1, Mahawatta, Colombo 14 for the last 40 years. Presently there are 60 Elders, both males and females of all casts races and religions. With the Grace of God and with well wishers `supports and public donations, we run this Home and look after the elders' physical and spiritual needs to the best of our abilities.

Negombo is selected for our Second Project where several elders suffer without any care and attention. Those who sympathise with them and wish to help them are kindly requested to send their contributions to the Credit of Account No. 107320117170 at the MUTUWAL Branch of NATIONAL SAVINGS BANK, Sri Lanka operated in the name of HOME OF COMPASSION, No. 201/1, Mahawatta, Colombo, 14, Sri Lanka.

The Congregation of Apostolic Carmel Sisters counting over 90 years of service in Sri Lanka presently run 41 convents, 23 schools, 20 children homes and homes for babies and elders in all parts of Sri Lanka under the guidance of Provincial Superior. Our Mission is to serve humanity.

Contributors can contact the following to get more details, if required:

(1) **Rev. Sister Rubika AC,**
Provincial Superior
Tel. : +94714524855
maryrubika@gmail.com

(2) **Rev. Sister Gnanadarshini AC,**
Bursar,
Tel. : +94772792848
Marygnana@gmail.com

(3) **Rev. Sister Mena,**
Superior Elders Home
Tel. : +94112522893

(4) **THE APOSTOLIC CARMEL**
Tel: +94112695045
acphsrilanka@gmail.com

(சிறுகதை)

வித்யாசாகர்

ஆட்டோ காரணும் அவன் தம்பி ரவியும்

- தொடர்

"இன்னா ஆளு தெரியுமா சார் அவன்? சும்மா நின்னா நாலு பேரை அடிப்பான். இப்போ ஒன்னுக்கு போவாது, வெளிய போவமாட்டான், ரெண்டு நாளைக்கு மூணு நாளைக்கு ஒருமுறை தோ அவ்வலோண்டு சோறு.. ம்ஹூ ம்ஹூ" சொல்லும்போதே கேவினான்..

தொண்டை அடைத்தது இனியவேந்தனுக்கு.

"வாரத்துல நாலுநாள் மூனுநாள்னு டேயுலூட் பண்ணனும். இல்லன்னா ஒன்னும் வெளிய வராது. வலில துடிக்கிறான் கடந்து.., கண்களை துடைத்துக்கொண்டே ஓட்டினான். இரண்டு பக்கமும் வண்டிகள் சரமாரியாகப் போய்க்கொண்டிருந்தது. வண்டி பாரிசுலிருந்து தாண்டி பூந்தமல்லி நெடுஞ்சாலையில் போய்க் கொண்டிருந்தது.

இனிய வேந்தன் அவனுடைய முகத்தையே தன் முகம் சுருக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"நானும் அவனுக்கு 'இது புடிக்கும் 'அது புடிக்கும்னு வாங்கிப் போவேன், எதையும் வெளிய போறதுக்கு பயிந்துக்குனு தொடமாட்டான் சார். எனக்கு இதலாம் பார்த்து பார்த்து உசுரே போய்டும் சார்.., அவன் அந்த தின்ற பொருள சாப்பிட முடியாம பார்க்குறதுக்கு இருக்கே.. ச்சே.. அதுக்கு அவன் செத்தேபோயிடலாம் அதே மேல்.., சில சமயம் முடிஞ்சி கொண்டுப்போய் குப்பையில கடாசிடுவேன்.

அவன் கூட இருந்தவன்லாம் செத்துப் போய்ட்டாங்க"

"செத்துப் போயிட்டாங்களா?.." ஏதோ பயம் கருணை உருக்கமென தொண்டையைக் கவ்வியது.

"ஆமா சார், யார் அழுவுறது இவ்வளோ பணம்(?) வாரத்துக்கு அம்பதாயிரம் ஆவும். மூணு தடவை டேயுலூட் பண்ணா நல்லுது, இப்போல்லாம் ரெண்டு தடவைதான் பண்றோம். காசுல்ல, நானும் எவ்வளோ உழைக்கிறது? அவன் கண்டி ஒழுங்கா இருந்திருந்தா இன்னைக்கு பத்து ஆட்டோ ஓடும் சார் ஏங் கூட, எல்லாம் பணமும் போச்சு, இருந்த எடத்தை எல்லாம்கூட வித்துட்டேன் சார்.."

"ஐயோ.. கடவுளே.."

"அவருக்கு கலியாணம் ஆச்சாணா' பக்கத்தில் இருந்தவர் கேட்டார்.

"ஆச்சுண்ணா, அது அவுங்க அப்பா வீட்டுக்கு ஓடிப் போச்சு"

"ஒரு மவன் இருந்தான், அதுவும் நோய் வந்து செத்துப்போச்சு, இனி அவனுக்கு யாரு இல்ல, என்ன வுட்டா அனாதை அவன்" தேம்பி அழுதான்

"இவ்வளோ கஷ்டப்பட்டு வெச்சிருந்து என்னப்பா செய்யபோற? இன்னும் எவ்வளவு நாளைக்கு பார்ப்ப?"

"பார்ப்பேன் சார், என் உடம்புல பொட்டு உயிர் இருக்கவரைக்கும் பார்ப்பேன். என் தம்பி சார் அவன். அவன் பாவம் சார்.. சின்ன பையன் சார்.. ஒழுங்கா வாழவே இல்லை சார்.. ஒரு நாளைக்கு வேண்டி அவனை காப்பாத்தி வைக்கமுடியும்னாலும் வெப்பேன் சார். அவன் போய்ட்டா எனக்கு யார் சார் தம்பின்னு இருப்பா..??? அவன் கேவி கேவி அழுதான். கண்ணீர் பாதையை மறைத்தது. ஓரங்கட்டி வண்டியை நிறுத்தினான்.

இனிய வேந்தன் அவனுடைய தோளைத் தொட்டு மார்பில் அணைத்துக்கொண்டார். கொஞ்சம் அவனை சமாதனம் செய்து.. வண்டியில் அமரவைத்தார். மூவரும் ஆட்டோவினுள் அமர்ந்தார்கள்.

"வண்டியை எடு"

"எங்க" என்பதுபோல் அவன் அவரைப் பார்த்தான்.

"எடு சொல்றேன், பாரிஸ் கார்னர் போ.." என்றார்.

அவன் வேறொன்றுமே பேசவில்லை. எந்திரம்போல மரத்துக்கிடந்தான் அவன். பிள்ளைகள் டையர் வைத்து விளையாட்டிற்கு ஓட்டுவதைப்போல



வண்டி உருண்டு ஓடியது. பாரிஸ்கார்னர் வந்தது. ஒரு ஏடிஎம் எந்திரத்திற்கு அருகில் நின்றார்கள். இனியவேந்தன் இறங்கி, பையை துழாவி தனது பணத்தைத் தள்ளிவிட்டு விட்டு அடியிலிருந்த சிறிய பணப்பையை எடுத்தார். அதிலிருந்த ஏடிஎம் கார்டு எடுத்துப்போட்டு தனது வங்கிக் கணக்கிலிருந்த ஒம்பதாயிரத்து ஐநூறையும் எடுத்துக்கொண்டார். எடுத்துக்கொண்டு அவனை நோக்கி வந்தார். அவனிடம் வந்துநின்று அந்த பணத்தோடு பையிலிருந்த இரண்டு லட்சத்தையும் சேர்த்து வாரி நீட்டினார்.

"இந்தா.. இதில் மொத்தம் ரெண்டு லட்சாதி ஒம்பதாயிரம் சொச்சம் இருக்கு, இவ்வளோதான் என்னால் முடியும், கொண்டுபோய் உன் தம்பியை இன்னும் ஒரு மாதத்துக்கு உயிரோட வெச்சிரு போ.." என்றார்.

அவனுக்கு அதை அத்தனைப் பெரிய உதவியாக பார்த்துக்கொள்ளத் தெரியவில்லை. நன்றியை அத்தனை உணர்ச்சிப் பூர்வமாக அவனுக்குக் காட்ட தெரிந்திருக்கவில்லை. அவனுடைய பாரம் உயிரைப் பற்றியது. ஏதோ கொடுக்கிறார். வாங்கிக் கொள்வோமென வாங்கிக்கொண்டான். அவனால் பேச முடியவில்லை. அவருடைய இரண்டு கைகளை இறுகப் பற்றிக்கொண்டான், அவர் இதலாம் பெருசில்லை விடு.. என்றார். அவன் அவருடைய கைகளை எடுத்து தனது முகத்தில் தாயின் முந்தானையைப் போல ஒற்றிக்கொண்டான்.

அவருக்கு பாரம்.. பாரம்.. மனசெல்லாம் பாரம். ஒருவன் சாகக்கிடக்கையில் நான் எனது வாழ்வதைப பற்றி யோசிப்பது சிறப்பில்லை. அத்தனைப் பெரிய மனிதமில்லை அது. எனக்கு வாழ்க்கை இதுதான். என்னை சார்ந்தவர்களுக்கு வாழ்க்கை இதுதான். இதலாம் விட அந்த ஒரு உயிர்.. இன்னும் ஒரு நாளைக்கோ இரண்டு நாளைக்கோ வாரத்திற்கோ மாதத்திற்கோ மட்டுமே இந்த மண்ணிலிருந்து விட்டு போகப்போற அந்தத் தம்பியின் உயிர் பெருசு. அவனுடைய கண்ணீர் என் தோளில் சாய்ந்தழும்போது எப்படி சுட்டதே, அந்த சூட்டை தணிக்கும் பொதுநியாயம் நிறைந்ததொரு சமுதாயம் எனக்கு வேண்டும். அது என்று பிறக்கும்? எனக்கு' என் மனைவிக்கு' என் பிள்ளைகளுக்கு இந்த பணமில்லாதுபோனால் போகட்டும். ஆனால் எங்களுக்கந்த சமுதாயம் வேண்டும். அது என்று பிறக்கும்?

பிறக்கட்டும். என்னால், என்னைப் போன்றோரால் பிறக்கட்டும். பிறக்கட்டும்.. அவர் இரண்டு கையை விரித்து முகத்தை துடைத்தவாறே பெருமூச்சி விட்டுகொண்டு நடந்தார்.

வானம் டமடம என்றது.

மேகங்கள் நகர்ந்து ஒன்றோடொன்று உரசியது..

மரங்கள் இங்கும் அங்கும் சாய்ந்து சாய்ந்து ஆட இரவு நேரக் காற்று சில்லென்று வீச.. ஆந்தை ஒன்று தெருவிளக்கு கம்பத்தின் மீது நின்றுக்கொண்டு கோக் கோக் கோக்கென்று கத்தியது. மழை லேசாக தூரலிட இனியவேந்தன் சற்று கடைகளின் ஓரமாக ஒதுங்கி வீட்டை நோக்கி நடந்துக்கொண்டிருந்தார்..

மழையின் ஈரத்தில் இனியேனும் கொஞ்சம் மனிதம் முளைத்துக்கொள்ளட்டும்..

வீட்டிற்கோர் புத்தகசாலை

அறிஞர் அண்ணா

"தமிழ் உரைநடைப் பாணியில் ஒரு புதுமையை விளைவித்தவர் அறிஞர் அண்ணா... துள்ளும் கவிதை போலவும் தமிழ் உரைநடை எழுதலாம், அந்த நடையிலே கவர்ச்சியுள்ளது, அது நெஞ்சை ஈர்க்கவல்லது, உணர்ச்சிகளைப் பெருக்க வல்லது என்று தம் எழுத்துக்களால் மெய்ப்பித்துக் காட்டியவர் அண்ணா."

- சு.சண்முகசுந்தரம்

உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஒரு காரணத்தால் நேரிடும் ஏதோ ஒரு சம்பவம் உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். பாலஸ்தீனத்தில் போர், அது பற்றிய வாதப்பிரதிவாதம் பாளையங்கோட்டையில், இத்தாலியில் எலக்ஷன் என்றால் இங்கு எந்தக் கட்சி அங்கு வெற்றி பெற வேண்டும் என்பது பற்றி விவாதம். உலகத் தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்துகொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம். வாழ்கிறோம் என்றால் நமது வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் வளமாக்கும் பெரும்பொறுப்பை ஆயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டல்ல. யார் சிரத்திலே மணிமுடி ஜொலிக்கிறது.

எவர் கரத்திலே உடைவாள் மின்னுகிறது என்று பார்த்து ஆட்சிப் பொறுப்பை அப்படிப்பட்டவர்களிடம் ஒப்படைத்து விட்டல்ல. ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஏற்றுக்கொண்டு, நாட்டின் நாயகர் நாங்கள் என்று மார்தட்டிக் கூறிக் கொண்டுள்ள நிலை இருக்கிறது, உலகுக்கு இது நன்கு தெரியும். உலகின் கவனம் நமது நாட்டின் பக்கம் நன்றாகத் திரும்பும் படியான முறையிலும், அளவிலும் நாம் நமது நாட்டின் சிறப்புப் பற்றியும், நமது ஆற்றலைப் பற்றியும் பாட்டுமொழியிலே பேசிவிட்டோம் - சற்று அதிகமாகவே கூட. "என் நாடு பொன்னாடு, ஏது இதற்கோர் ஈடு" என்று திருப்புகழ் பாடினோம். இங்கு வானை முட்டும் மலைகள், வற்றாத ஆறுகள், வளமான வயல்கள், கனி குலுங்கும் சோலைகள் ஏராளம். முத்து உண்டு எமது கடலில், தங்கம் உண்டு எமது பூமியிலே என்று ஆனந்தக் களிப்புச் சிந்து பாடியிருக்கிறோம். எல்லாம் சரி; உமது நாட்டுக் கல்வி நிலையைக் கூறு என்று கேட்டால், நாம் வெட்கித் தலை குனியும் நிலையில் இருக்கிறது. வேத வேதாந்திகள், சித்தாந்த சிரோமணிகள், திருஅருளைப் பெற்றவர்கள் எமது நாட்டிலே உண்டு என்று பேசலாம்; பேசுகிறோம். இன்னும் சிலர் பேசிக்கொண்டே இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் கண்ணனுக்குக் கையெழுத்துப் போடத் தெரியுமா? என்றால், தலையை ஆட்டுகிறான். முத்தனோ மறந்துவிட்டது என்று கூறுகிறான். முனியன் கையெழுத்திடுகிறான். ஆனால் முன்னெழுத்தும் கடையெழுத்தும் சரியாக இருக்கிறது; இடையில் உள்ள எழுத்துக்களோ சம்மந்தமற்றவைகளாக உள்ள இந்நிலை இருக்கிறது. நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களுக்கு கூரிய வாள், பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு; ஆனால், அந்த வீரனின் வழி பழுது. இந்நிலை நாட்டுக்குச் சிறப்பு அளிக்காது. நல்லாட்சிக்கு வழி கிடைக்காது. நாட்டு நிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டு நிலை மாறவேண்டும்

– 'வீட்டிற்கோர் புத்தகசாலை' என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்ல நிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலை கண்டு, நதிகண்டு, மாநிதி கண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது – அந்த நாட்டு மக்களின் மன வளத்தைக் கண்டே மாநிலம் மதிக்கும். மன வளம் வேண்டும் – மிக மிக விரைவில் – மிக மிக அதிகமாக எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர் அனைவருக்குமாவது மன வளம் இருக்கிறதா? அவர்களின் வீடுகளாவது, நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துக்கள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன்தான் கூறி ஆக வேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்க வேண்டுமானால் இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்று சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமான மன வளத்தைப் பெற முடியும். நமது முன் சந்நதியார்களுக்கு இருந்ததை விட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன.

அவர்களின் காலம், அடவியில், ஆற்றோரத்தில், பர்ணசாலைக்குப் பக்கத்தில், ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித் தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம், இப்போதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக் கூடிய காலம் – பாமர மக்கள் பாராளும் காலம். மன வளத்தை அதிகப்படுத்த மார்க்கம், முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம். இதோ நான் பேசுகிறேன் – நீங்கள் கேட்கிறீர்கள். இடையே – பலப்பல மைல்கள் – நானோ நீங்களோ தவசிகளல்லர் – அருளால் அல்ல இந்த ஒலி அங்கு கேட்பது – அறிவின் துணைகொண்டு விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள், நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன் மன வளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே மன வளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை – வழி வகை தேடிக்கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் இருக்கும். விசேஷ காரியங்களுக்குப் பயன்பட, கூடத்து அறை இரண்டிருக்கும். அதிலொன்று பூட்டியே இருக்கும். சாவி வீட்டின் அதிபரிடமிருக்கும். மற்றோர் அறையிலே – தொட்டிலோ ஏணையோ இருக்கும். அங்கு தூங்கும் குழந்தையை வேறொர் குழந்தை தொல்லைப்படுத்தும். அதை விடப் பெரிய குழந்தை. இதனைச் சமையலறையிலுள்ள தன் தாயிடம் சென்று கூறும். "பூஜை அறையில் அப்பா இருப்பார், போய்ச் சொல்' என்று தாய் கூறுவாள். அங்கு அவர் இருக்க மாட்டார். மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருப்பார் – நம் வீடு ஏறக்குறைய இது போலிருக்கும் கூடம். பாதுகாப்பான அறை உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்க வேண்டுமானால் இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்று சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமாக மன வளத்தைப் பெறமுடியும். நமது முன் சந்நதியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில், ஆற்றோரத்தில், பர்ணசாலைக்குப் பக்கத்தில், ஆரமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித் தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம், இப்போதுள்ளது, உலகை நமது வீட்டுக்கு அழைத்து வந்து காட்டக் கூடிய காலம் – பாமர மக்கள் பாராளும் காலம். மன வளத்தை அதிகப்படுத்த மார்க்கம், முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம், இதோ நான் பேசுகிறேன்

– நீங்கள் கேட்கிறீர்கள். இடையே – பலப்பல மைல்கள் – நானோ நீங்களோ தவசிகளல்லர் – அருளால் அல்ல இந்த ஒலி அங்கு கேட்பது – அறிவின் துணைகொண்டு விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்விதச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள், நமது முன்னோர்கள் காலம்.

இவ்வளவு வசதிகள் நமக்கிருந்தும், ஏன் மன வளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே மன வளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை – வழி வகை தேடிக் கொள்வதில்லை.

பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் இருக்கும். விசேஷ காரியங்களுக்குப் பயன்பட, கூடத்து அறை இரண்டிருக்கும். அதிலொன்று பூட்டியே இருக்கும். சாவி வீட்டின் அதிபரிடமிருந்தும். மற்றோர் அறையிலே – தொட்டிலோ ஏணையோ இருக்கும். அங்கு தூங்கும் குழந்தையை வேறோர் குழந்தை தொல்லைப்படுத்தும். அதை விடப் பெரிய குழந்தை. இதனைச் சமையலறையிலுள்ள தன் தாயிடம் சென்று கூறும். "பூஜை அறையில் அப்பா இருப்பார், போய்ச் சொல்" என்று தாய் கூறுவாள். அங்கு அவர் இருக்க மாட்டார். மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள திண்ணையில் படுத்துக் கொண்டிருப்பர் – நம் வீடு ஏறக்குறைய இது போலிருக்கும். கூடம்– பாதுகாப்பான அறை – படுக்கை அறை – சமையலறை – பூஜை அறை – இவை எல்லாம் இருக்கும் – புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஒரு அறை தேடிப் பாருங்கள், மிகமிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது, சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால் புத்தகசாலை உண்டா என்று கேளுங்கள் – பதில் கூற மாட்டார்கள்; ஒரு புன்னகை தோன்றும். பைத்தியக்காரரா! இது வீடு. நீ என்ன இங்கு வந்து, புத்தகச்சாலை கேட்கிறாயே என்று பொருள் அந்தப் புன்னகைக்கு.

வீடுகளில் மேஜை நாற்காலி சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்குக்கூட இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட புத்தகசாலை இராது – இருக்க வேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை – அவசியமும் தோன்றுவது இல்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவா கலியாணத்தின் போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமுக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால் பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூற மாட்டார்கள்.

வீட்டின் அலங்காரத்தையும், விசேஷ கால உபடயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை காட்ட வேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம், இனியும், இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயமாக வேண்டும் – வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலை மாறி, புத்தக சாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்.

எவ்வளவு செலவு? ஏது அவ்வளவு பணம் என்று கேட்பர்? பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது. அந்தக் குறையைப் போக்க, பொதுப் புத்தகசாலைகளை நடத்தி, சர்க்கார், நகர சபைகள், பொதுநலக் கழகங்கள் பணிபுரிய வேண்டும். ஆனால் சில அடிப்படை அறிவுக்குத் தேவையான புத்தகங்களையாவது வீடுகளில் சேகரித்துப் பயன்படுத்தும் முறை இருக்க வேண்டும்.

பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள மட்டுமல்ல - ஏற்கெனவே நமது மக்களுக்குத் தெரிந்திருக்கிற பல விஷயங்களை மறந்துபோகச் செய்வதற்குப் பல புத்தகங்கள் தேவை. நம் மக்களுக்குக் கைலாயக் காட்சிகள், வைகுந்த மகாத்மியம், வரலட்சுமி நோன்பின் மகிமை, நாரதரின் தம்பூரு, நந்தியின் மிருதங்கம், சித்திரா புத்திரரின் குறிப்பேடு, நரக லோகம், அட்டைக்குழி அரணைக்குழிகள், மோட்சத்தின் மோகனம், இந்திர சபையின் அலங்காரம், அதற்குப் பாடி ஆடும் மேனகையின் அழகு இவையெல்லாம் தெரியும். ஆறுமுகம் தெரியும். அவர் ஏறும் மயில் தெரியும், அம்மை வள்ளிக்கும், அழகி தெய்வானைக்கும் ஏசல் நடந்தது தெரியும். இவையும், இவை போன்றவையும் ஏராளமாகத் தெரியும்.

நந்தி துர்க்கமலை எங்கே? தெரியாது என்பர். நிதி மந்திரியின் பெயர் என்ன? அறியோம் என்பார்கள். காவிரியின் பிறப்பிடம்? கவலை கொள்ளார். பாலாற்றில் நீர் ஏனில்லை? சொல்லத் தெரியாது. நூல் ஆலைகள் எவ்வளவு உள்ளன? கணக்கு அறியார். தாராபுரம் எந்தத் திசையில் இருக்கிறது? தெரியாது. தாமிரபரணி எத்தனை மைல் நீளம் ஓடுகிறது? திகைப்பர் பதிலறியாமல், அவர்கள் வாழும் மாவட்டத்தின் அளவு என்ன? தெரியார் என்பர். மாகாணத்தின் வருமானம் என்ன? அறியார்கள் - அறிந்து கொள்ளவும் முயலமாட்டார்கள். அனுமத் பிரபாவம் தெரியும். அரச மரத்தைச் சுற்றினால் என்ன பயன் கிடைக்கும் என்பதைக் கூறத் தெரியும். பேய் பில்லி சூன்யம் பற்றிய கதைகளைக் கூறத் தெரியும். அவர்கள் ஏறிச்செல்லும் ரயிலைக் கண்டுபிடித்தவர் யார் என்பது தெரியாது. அதிலேறிச் செல்லும் இடத்திலே அவர்கள் தரிசிக்கப்போகும் கருணானந்த சுவாமிகளின் கால் பட்ட தண்ணீர் கர்மநோய்களைப் போக்கும் என்ற கதை பேசத் தெரியும்.

இது நமது மக்களின் மன வளம். இவர்கள் பெரும்பாலோர். இவர்களைக் கொண்டுள்ள நம் நாடு, அழிவுச் சக்தியில் அணுகுண்டு உற்பத்தியும், ஆக்க வேலைச் சக்தியில் சந்திர மண்டலத்திற்குச் சென்று வரும் ஆராய்ச்சியும் நடத்திக் கொண்டு வரும் உலகிலே ஓர் பகுதி. சரியா? நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்ட யாரும், இந்த நிலை சரி என்று கூற மாட்டார்கள். சரியல்லதான். ஆனால் என்ன செய்வது என்று கேட்பர்? வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனதிலே உலக அறிவு புக வழிசெய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்கூட அல்ல - அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது, புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தக சாலையை அமைத்துவிடலாம்.

புத்தகசாலை அமைக்கும்போது, ஏற்கெனவே நமது மக்களின் மனதிலே ஊறிப்போய் உள்ள, அர்த்தமற்ற, அவசியமற்ற, கேடே கூடச் செய்யக்கூடிய எண்ணங்களை நிலைநிறுத்தக்கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது. சேர்த்தால் மனவளம் ஏற்படாது. மனம் சதுப்பு நிலமாகும். பழமைப் கள் புழுக்கள் நெளியுமிடமாகும்.

புத்தகசாலை அமைப்பது என்று திட்டமிட்டுப் புதுவருஷப் பஞ்சாங்கத்தில் ஒரு மூன்று தினுசும், பழைய பஞ் சாங்கக் கட்டு ஒன்றும், பவளக்கொடி மாலையும், பஞ்சாமிர்தச் சிந்தும், பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையும், பேய் பேசிய புராணமும், நல்லத்தங்காள்

புலம்பலும், அரிச்சந்திர மயான காண்டமும் ஆகியவற்றை அடுக்கி வைத்தால், நாம் கோரும் மன வளம் ஏற்படாது. நமது நாட்டை வஞ்சகர்களுக்கு ஏற்ற வேட்டைக்காடு ஆக்கும் தீக்குச்சி சேர்ப்பது போலாகும்.

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேர்க்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் கூட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தகசாலையென்று பெயரிடுவது – குருடர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர் வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக்கூத்தாக முடியும்.

ஒவ்வோர் வீட்டிலும், வசதி கிடைத்ததும், வசதி ஏற்படுத்திக் கொண்டதும் அமைக்க வேண்டிய புத்தக சாலையில், நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள், இவை முதலிடம் பெற வேண்டும். பொதுவாகவே, மக்களின் அறிவுக்குத் தெளிவும், ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத்தக்க நூல்கள் இருக்க வேண்டுமேயொழிய, வாழும் இடத்தை வகையற்றது என்று கூறி, மன மருட்சியை யும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்களும் இருத்தலாகாது.

பஞ்சாங்கம் அல்ல, புத்தகசாலையில் இருக்க வேண்டியது; அட்லாஸ் – உலகப்படம் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படைப் பிரச்னையிலே நேர்மையான முறையையும், நெஞ்சு உரத்தையும் காட்டியாக வேண்டும். அப்போதுதான் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைப்பது என்பது அறிவுத் தெளிவுக்கு வழி செய்யும் மன வளத்தை உண்டாக்கும்; நாட்டை வாழ வைக்கும். புலியை அழைத்துப் பூமாலை தொடுக்கச் சொல்ல முடியாது. சேற்றிலே சந்தன வாடை கிடைக்குமென்று எண்ணக்கூடாது.

நமது பூகோள அறிவு, பதினான்கு லோகத்தைக் காட்டிற்று அந்த நாட்களில், நமது மார்க்க அறிவு, நரபலியைக் கூடத் தேவை என்று கூறிற்று அந்த நாட்களில், நமது சரித்திர அறிவு, பதினாயிரம் ஆண்டு ஒரு மன்னன் ஆண்டதாகக் கூறி வைத்தது. நமது பெண் உரிமையைப் பற்றிய அறிவு, காமக்கிழத்தி வீட்டுக்கு நாயகனைக் கூடையில் வைத்து தூக்கிச் சென்ற பத்தினியைப் பற்றி அறிவித்தது. நமது விஞ்ஞான அறிவு, நெருப்பிலே ஆறும், அதன்மீது ரோமத்தால் பாலமும் இருப்பதாக அறிவித்தது.

அப்படிப்பட்ட எண்ணங்களுக்கு ஆதாரமாக இருந்த ஏடுகளை இந்த நாட்களிலே நாம் வீட்டில் புத்தகசாலையில் சேர்ப்பது, நாட்டு நலனுக்கு நிச்சயமாகக் கேடு செய்யும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும் – நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும், வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கிய சாரத்தைச் சாமான்யரும் அறிந்து வாசிக்கக்கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்த பட்சம், மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கும் உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலை தேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டுக்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால், நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை – ஆனால் கேட்டினை நீக்கிடத் தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்க வேண்டும், வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

முகநூல் வருகையும் வலைப்பதிவு வளர்ச்சியில் தேக்கமும்

தமிழ் வளர்ச்சிக்கு இணையம் பல்வேறு வகைகளில் உதவியுள்ளது. இணைய அறிமுகத்தால் தமிழ் ஆர்வலர்கள் மிகுதியான படைப்புகளையும், நிகழ்ச்சிக் குறிப்புகளையும் வலைப்பதிவுகளில் பதிவுசெய்தனர். உலக அளவில் தமிழ்ச் செய்திகளின் பரவல் எளிதானது. இதனால் கூகுள் உள்ளிட்ட தேடுபொறிகளில் தமிழில் தேடுவோருக்குச் செய்திகள், படங்கள் உடனுக்குடன் கிடைத்துவருகின்றன. முகநூல் வருகைக்குப்பிறகு வலைப்பதிவு வளர்ச்சியில் ஒரு தேக்கநிலை இன்று காணப்படுகின்றது. முகநூல் வருகை வலைப்பதிவு வளர்ச்சியைப் பாதித்துள்ளது என்று இணைய ஆர்வலர்கள் சிலர் மதிப்பிடுகின்றனர். ஆனால் முகநூல் வளர்ந்துள்ளதே தவிர வலைப்பதிவு உருவாக்கி எழுதுபவர்கள் தொடர்ந்து எழுதியவண்ணம் உள்ளனர் என்று மறுப்புரை கூறுபவரும் உண்டு. இவ்விரண்டு கருத்துகளில் உள்ள வன்மை மென்மைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தமிழ் வலைப்பதிவுகளின் வளர்ச்சியால் தமிழ்ச்சமூகத்திற்கு அமைந்த பயன்கள், வலைப்பதிவு உலகில் தொடர்ந்து எழுதும் படைப்பாளிகளின் படைப்பு உள்ளடக்கம், அதற்கு அமையும் வரவேற்பு குறித்தும் இக்கட்டுரை ஆராய்கின்றது. அதுபோல் முகநூல் வளர்ச்சி, தமிழில் முகநூல் எழுதுவோரின் நோக்கம், முகநூல் படைப்புகளின் உள்ளடக்கம், முகநூலைச் சரியாகப் பயன்படுத்தும் படைப்பாளிகள், முகநூலில் உள்ள செய்திகளின் உள்ளடக்கம், மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் முகநூலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த செய்திகளையும் இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது.

முகநூல் வருகையும் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றமையும்

பேசுபுக்கை (Face Book) முகநூல் எனத் தமிழ்ப்படுத்தி வழங்குவர். இதனை உருவாக்கியவர் மார்க் சுக்கர்பெர்க் (Mark Zuckerberg). அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள ஒயிட் பிளைன்சில் பிறந்தவர் *(14.05.1984)*. பள்ளிப்பருவத்து மாணவராக இருக்கும்பொழுதே இவர் கணினி நிரல்களை உருவாக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் ஹார்வர்டு பல்கலைக்கழக மாணவராக இருந்தபொழுது, தம் இருபது வயது மாணவப்பருவத்தில் இதனை உருவாக்கினார். பல்வேறு வளர்ச்சிகளையும், வசதிகளையும் பெற்றுள்ள முகநூல் இணையதளம் பல்வேறு எதிர்ப்புகளையும், வழக்குகளையும் சந்தித்து வளர்ந்துள்ளது.

இன்று உலகில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இணையதளங்களில்

PageRank 237 blocked

முகநூல் இரண்டாம் இடத்தில் இருப்பதை அலெக்சாவின் பட்டியல் உறுதிப்படுத்துகின்றது (31.08.2014). இந்தத் தளத்தின் இன்றைய சந்தை மதிப்புப் பல்லாயிரம் கோடியாகும். இந்த இணையதளத்தை உலகின் பெரும்பாலான மக்கள் பயன்படுத்துகின்றனர். 18 வயதுக்கு உட்பட்டவர்கள் முகநூலைப் பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. இன்று இந்தக் கட்டுப்பாடுகள் நீங்கியதால் முகநூலை மாணவர்களும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.

சீனா, வியட்நாம், ஈரான், உஸ்பெகிஸ்தான், பாகிஸ்தான், சிரியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் முகநூல் இணையதளம் இசுலாமிய மதத்துக்கு எதிரானது எனவும் மத வேற்றுமையை ஏற்படுத்தக்கூடியது எனவும் குறிப்பிட்டுத் தடை செய்துள்ளனர். இங்கிலாந்து நாட்டின் நிறுவனங்களில் வேலை நேரத்தில் முகநூல் இணையதளம் பார்ப்பதற்குப் பாதிக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தடை விதித்துள்ளன. முகநூல் பயன்படுத்துபவர்களில் எட்டுக்கோடிப் பேர் போலியான பெயர்களைக் கொடுத்துப் பயன்படுத்துகின்றனர் என்று ஒரு புள்ளிவிவரம் குறிப்பிடுகின்றது.

பொழுதுபோக்கு என்ற நிலையைக் கடந்து செய்திகளைப் பரிமாறிக்கொள்வதற்கும், பிரிந்தவர்கள் இணைவதற்கும், ஒத்த கருத்துடையவர்கள் இணைந்து செயல்படுவதற்கும், வணிகத்தை வளப்படுத்தவும், தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், அன்றைய நடப்புகளை நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் உடனுக்குடன் தெரிவிப்பதிற்கும் மிக எளிதாக இருப்பதால் அனைத்துத்தரப்பு மக்களாலும் முகநூல் இணையதளம் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. "த சோசியல் நெட்வொர்க்" என்ற பெயரில் முகநூல் குறித்த திரைப்படம் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முகநூலில் கட்டுரையாகச் செய்திகளை விளக்குவதைவிட ஒரு படத்தின் வழியாகவும், ஒலி, ஒளிக் காட்சிகள் வழியாகவும் எளிதில் விளக்கமுடியும். முகநூலைப் பயன்படுத்துவதற்கு எளிதாக இருப்பதாலும், இதில் இணைந்துள்ளவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதாலும் முகநூல் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. முகநூலில் செய்திகள் வெளிவருவதால் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் உடனுக்குடன் காண்பதற்கும், கருத்துத் தெரிவிப்பதற்கும், பரப்புவதற்கும் வாய்ப்பாக இருப்பதால் முகநூல் இணையதளம் எல்லோராலும் விரும்பப்படுகின்றது. முகநூலில் உரையாடுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. முகநூலில் பல்வேறு குழுக்கள் உள்ளன. சிம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள் முகநூல் குழுவினை உருவாக்கிச் சிறப்பாகச் செயல்படுகின்றனர்.

தமிழ் முகநூல் உள்ளடக்கங்கள்

தமிழ் முகநூல் உள்ளடக்கங்களைப் பார்க்கும்பொழுது ஒரு சிலர் தரமான கட்டுரைகளை இத்தளத்தில் வழங்கினாலும் பெரும்பாலும் நடந்த நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். நூல்வெளியீடுகள், சந்திப்புகள், கண்ட காட்சிகள், பயண அனுபவங்கள், அறிக்கைகள் வெளியிடுவது, பொழுதுபோக்குச் செய்திகளைத் தருவது மிகுதியாக உள்ளன. பிறந்தநாள் செய்திகள், இலக்கிய நிகழ்வுகள், புத்தகக் கண்காட்சிகள் பற்றிய செய்திகளும், படங்களும் முகநூலில் இடம்பிடிக்கின்றன.

தங்களுக்குப் பிடித்தவர்களைப் பாராட்டுவதும், பிடிக்காதவர்களைப் பற்றியும் அவர்களின் அந்தரங்கங்களைப் பற்றியும் எழுதும் போக்கும் முகநூலில் உள்ளன. குழந்தைகளின் காதுகுத்திப் படங்கள், பிள்ளைகளின் பிறந்தநாள் கொண்டாட்டப் படங்களைப்

voice on BlogThis! lets you comment on

பதிவதில் பெரும்பாலனவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். மனைவி மக்களுடன் சுற்றுலா செல்வது, அருவிகளில் நீராடுவது ஆகியவற்றை ஆர்வமுடன் சிலர் பதிகின்றனர். கண்ட காட்சிகள், வியப்புக்குரிய வீடியோ பதிவுகள் உடனுக்குடன் முகநூலின் வழியாகப் பரவிச் செல்வாக்குப் பெற்றுவிடுகின்றன. அரசியல் துறையில் இருப்பவர்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை முகநூலில் பதிந்து தங்கள் இருப்பை உறுதிப்படுத்துகின்றனர். ஆன்மீகச் செய்திகள், பகுத்தறிவுச்செய்திகள் தமிழ் முகநூல் உள்ளடக்கங்களாக அமைகின்றன. பெண்களின் படங்கள், குழந்தைகளின் படங்களை முகநூலில் பதிவதைத் தவிர்க்கும்படி பலர் கூறினாலும் அதனைப் பொருட்படுத்தாமல் வெளியிட்டு வருவதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காவல்துறையினர் முகநூல் வழியாக முறையீடுகளைக் கவனித்து உரிய நடவடிக்கை எடுப்பதும் நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு அரசியல் தலைவரும், எழுத்தாளர்களும் தங்களுக்கு என முகநூல் பக்கங்களைத் திறந்து தங்கள் பணிகளை மக்களுடன் பகிர்ந்துகொள்கின்றனர். தேர்தல் காலங்களில் முகநூல் பெரும் செல்வாக்குப் பெற்றுவிடுகின்றது. தங்கள் எண்ணங்களை முகநூலில் பகிர்ந்துகொள்வதை உயர்வாக நினைக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் முகநூலில் செய்திகளைப் பகிர்ந்துகொண்டு அரசின் நீதிமன்றத்தின் கவனத்தை இழுத்து உரிய நிவாரணம் பெறுவது முகநூலில் நிகழ்கின்றது. இவ்வாறு அன்றாட நடப்புச் செய்திகள் முதல் பன்னாட்டு அரசியல் வரை முகநூலில் உரையாடலுக்கு உட்படுவதால் பல தரப்பு மக்களும் முகநூலில் ஊடாடி வாழ்கின்றனர்.

தமிழ் வலைப்பதிவுகள்

வலைப்பதிவு என்பது அடிகடிப் புதுப்பிக்கவும், கடைசியாக வெளியிட்ட செய்தி முதலில் தெரிவதற்குமான இணையதளமாகும். இதனைப் பிளாக் என்று குறிப்பர். தொடக்கத்தில் வெப்லாக் என்றே இதனைக் குறித்தனர். WebLog என்ற பெயர் முதன் முதலில் 17.12.1997 இல் Jorn Barger' என்பவரால் பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு இந்தப் பெயர் பிரிக்கப்பட்டு We bLog என்று பயன்படுத்தியவர் Peter Merholz ஆவார்(1999). ஆனால் 1994 முதல் பலரும் வலைப்பதிவை எழுதத்தொடங்கிவிட்டனர்.

1996 இல் 'Xanga என்ற இணையதளம் வலைப்பதிவுச் சேவையைத் தொடங்கியது. இதே காலப்பகுதியில் bloger.com என்ற நிறுவனம் இந்தச் சேவையைச் சிறப்பாகச் செய்துவந்தது. இந்த நிறுவனத்தைக் கூகுள் நிறுவனம் 2003 இல் விலைக்கு வாங்கியது. தமிழில் முதல் வலைப்பதிவு செய்தவர் கார்த்திகேயன் இராமசாமி எனவும் இவர் 2003 சனவரி 1 இல் முதல் வலைப்பதிவு செய்தார் எனவும் அறியமுடிகின்றது. இவ்வாறு வலைப்பதிவு செய்தவர்களின் பதிவுகளை ஒன்றிணைத்துக்காட்டத் தமிழ்மணம் என்ற திரட்டியை முதலில் உருவாக்கியவர் காசி ஆறுமுகம். தமிழ்மணம் திரட்டி 2004 ஆகத்து மாதம் பயன்பாட்டுக்கு வந்தது. இவர் உருவாக்கிய தமிழ்மணத்தில் 11777 பேர் (31.08.2014) இணைந்து வலைப்பதிவுகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கின்றனர். தமிழ் வலைப்பதிவுகளைத் திரட்டிக்காட்டும் முயற்சியில் தேன்கூடு, தமிழ்வெளி, திரட்டி உள்ளிட்ட திரட்டிகள் தோன்றின.

தமிழ் வலைப்பதிவுகள் தொடக்கத்தில் தொழில்நுட்ப ஆர்வமும் தமிழ் ஆர்வமும் உடையவர்களால் தொடங்கப்பட்டன. இணையதளங்களுக்கு நிகரான சேவையை வலைப்பதிவுகளால் வழங்கமுடிந்ததால் வலைப்பதிவு தொடங்குவது ஓர் இயக்கமாகவே தமிழகத்தில் நிகழ்த்தப்பட்டது. தமிழ் இணையப்பயிலரங்குகள் வழியாக வலைப்பதிவுகள் மக்களுக்கும் மாணவர்களுக்கும் அறிமுகமாயின. இதனால் தங்கள் பங்களிப்புகளை வழங்கத் தன்னார்வலர்கள் முன்வந்தனர்.

தமிழ் வலைப்பதிவு செய்தவர்கள் தங்கள் பதிவுகளை உடனுக்குடன் இற்றைப்படுத்தினர். இலக்கியம், அரசியல், மொழிபெயர்ப்பு, சமூகச் செயல்பாடுகளை விளக்கும் வகையில் தமிழ் வலைப்பதிவுகள் இருந்தன. அந்த அந்தத் துறை சார்ந்தவர்கள் தத்தம் துறைசார்ந்த வலைப்பதிவுகளை விரும்பிப்படிப்பதில் நாட்டம் செலுத்தினர். அதேபோல் தமிழ் வலைப்பதிவர்களிடையே நட்பும் தொடர்பும் பெருகி வலைப்பதிவு வழியாகத் தமிழ் மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தனர். வலைப்பதிவுத் தொழில்நுட்பம் அறிய நினைத்தவர்களுக்குச் சிறப்பாக அறிமுகம் அமைந்தால் அவர்கள் தொடர்ந்து பங்களிப்புகளைச் செய்ய முன்வந்துவிடுகின்றனர். அவ்வாறு வந்தவர்களுள் பத்ரி. யுவகிருஷ்ணா, மதிமாறன், புதுக்கோட்டை முத்துநிலவன், கரந்தை ஜெயகுமார். முனைவர் ஜம்புலிங்கம், மானிடள் என்ற பெயரில் எழுதும் பேராசிரியர் மு.பழனியப்பன் முதலியவர்கள் தொடர்ந்து தமிழுக்கும் சமூகத்திற்கும் ஆக்கமான பதிவுகளை வழங்கிவருகின்றனர்.

சிலரின் வலைப்பதிவுகள் தொழில் நுட்பத்துக்கு முதன்மையளித்து உள்ளடக்கங்களுக்கு இரண்டாம் இடம் தரும் போக்கையும் தமிழ் வலைப்பதிவுலகில் பார்க்கமுடிகின்றது. தமிழ் வலைப்பதிவர்களில் சிலர் தொடர்ச்சியாகவும், சிலர் இடைவெளியிட்டும் பங்களிப்புகளை வழங்கிவருகின்றனர்.

வலைப்பதிவுகளில் கட்டுரை அமைப்பில் செய்திகள் படங்களுடன் வெளிவந்தசூழலில் முகநூல் தமிழ் மக்களுக்கு அறிமுகமானதும் மிக எளிய நுட்பங்களைப் பயன்படுத்தி நடப்பியலைத் தர முடிவதால் வலைப்பதிவர்கள் தங்கள் செய்திகளை முகநூலிலும் வெளியிட முனைந்தனர். நீண்ட நேரம் தமிழ்த்தட்டச்சுச் செய்வது பலருக்குத் தெரியாததால் ஆங்கிலத்தில் தட்டச்சிட்டோ ஓரிரு சொற்களைத் தமிழில் தட்டச்சிட்டோ படங்களின் துணையுடன் முகநூலில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. விருப்ப வசதி, பகிரும் வசதி, கருத்துரைக்கும் வசதி, இணைப்பு வசதி, தடுக்கும் வசதி, குழுவாக இணைந்து இயங்கும் வசதி, செய்தி அனுப்பும் வசதி என்று பலவகையான வசதிகள் முகநூலில் இருப்பதால் அனைவரும் முகநூலில் இணைவதை ஒரு சமூக மரியாதையாக நினைக்கின்றனர்.

செய்திகள் என்பவை கட்டுரைகள் மட்டுமல்ல. கட்டுரைகளில் சொல்லும் செய்திகளைப் படங்களாலும், ஒலி, ஒளிக்காட்சிகளாலும் விளக்கமுடியும், வேகமாக மக்களுக்குக் கொண்டுசெல்லமுடியும் என்ற நிலை ஏற்பட்டதால் முகநூல் வளர்ச்சி தொய்வில்லாமல் வேகமாகச் செல்கின்றது. வலைப்பதிவு என்பது செய்திகளைத் திரட்டுவது அல்லது சிந்தித்து எழுதுவது, தட்டச்சிடுவது, படங்களை இணைத்து வெளியிடுவது என்று பல பணிகள் அடங்கிய கூட்டுப்பணியாக இருக்கும். எழுதுவதற்கும், தேவையான அளவில் படம் வழங்குவதற்கும், முழுச்செய்தியையும் விரிவாகப் படிப்பதற்கும் காலத் தேவை மிகுதியாக எடுத்துக்கொள்ளும். எனவே வலைப்பதிவு செய்வதைவிட முகநூலில் எழுதுவது செல்வாக்குப் பெற்று வருகின்றது.

முகநூலில் பதிவிடும் செய்திகள் கூகுள் உள்ளிட்ட தேடுபொறிகளில் தேடும்பொழுது தெரிவதைக் காட்டிலும் வலைப்பதிவில் வெளியிடப்படும் செய்திகளே தேடுவோருக்கு முதலில் தெரியும். இந்த நுட்பங்களை உணர்ந்தவர்கள் தொடர்ந்து வலைப்பதிவில் எழுதுவதை இடைவிடாமல் செய்துவருகின்றனர்.

ஆற்றுவெள்ளமாகப் பாய்ந்துசெல்லும் வளர்ச்சி முகநூலில் தெரிகின்றது. அமைதியான நதியின் போக்கு வலைப்பதிவுகளில் காணப்படுகின்றது.

ஆன்மிகவாதிகளுக்கு அரிய சந்தர்ப்பம்

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?

திருவிழா – சுற்றுலா



மார்கழி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டு மார்கழி 16ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா – திருவண்ணாமலையும் – அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருகைகைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு

World Travel & Tour

020 84659888

020 84659666



Happy Akshaya Tritiyo

லாசியத்தில் தரமான நகைக்கடை

தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

Thinesh

Jewellers & Textiles

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com

லாசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10

Best Food

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677



எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

PATHMINI
JEWELLERS
22ct GOLD

892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999

ஆடை
ஆபரணம் வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்

Jk Gold House &
Fashion House

314 - 316 London Road
Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677

எவரஸ்ட்

24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

அசத்தலான
அசைவ சுவைக்கு

Breakfast Lunch Dinner

Anthoorium

World of Designs

Jewellery
&
Textiles

102, B Burlington Road
New Malden
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



செல்வராஜா கோல்ட் ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

SELVARAJA GOLD HOUSE & TEXTILES

£ 300க்கு மேல்
நகை வாங்குவோருக்கு
லட்சுமி தங்கக் காசு
இலவசம்

- உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய விலையில் உடன் பணம்.
- சொற்ப கூலியை மட்டுமே செலுத்தி புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
- எங்களிடம் தாலிக்கொடி செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் 50% விலைக்கழிவில்.
- புதிதாக ஆரப்பிக்கப்பட உள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்.

162 B Mitcham Road London SW17 9NJ
Tel : 208 767 3795 **Mobile : 078 25005269**

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

396-400 Ilford Lane
Town Centre Ilford, IG1 2NB
Tel : 020 8553 7737

SUN MOTORS

Mechanical / Body Repairs /
Recovery / Tyres

Tel : 02086920232

R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW

லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும் தமிழர் உணவு வகைகள்

லீலா

தயாரிப்புகள்

உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

Vaani Foods

தொலைபேசி இலக்கம்

0208 668 7648

SURYAA

CURRY LEAVES | PEPPER | CUMIN | FENNEL | TURMERIC | CLOVE | RAMPE | CINNAMON | 4 TYPES OF CHILLIES | FENUGREEK | CORIANDER | FENNEL

உங்கள் திருமணத்தின் ஏழு வைபவங்களையும்
ஆரெம்கேவியின் "பிரைடல் சில்க்ஸ் ஆப் இந்தியா"
பட்டோடு கொண்டாடுங்கள்

93 years of silk heritage

RMKV Wedding Silks

Bridal Seven

நிச்சயதார்த்தம்
மெஹந்தி
ஊஞ்சல்
முகூர்த்தம்
நலுங்கு
ரிசப்ஷன்
கிருஹப்பிரவேசம்

• சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
• கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு
• திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண் • பெங்களூரு - ஓரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks

கணேஷா தமிழ் கடை

Ganesha Asian Supermarket

433 Bromley Road Downham BRI 4PH

020 8698 0990

Lewisham, Catford
Downham, Bromley
வாழ் மக்களுக்கு
ஒரு
புதிய உதயம்

- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறிகள் பழங்கள்
- உடன் மீன் இறைச்சி வகைகள்
- குடிபானங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- பூஜைப் பொருட்கள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள்
இன்றே விரையுங்கள்



தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை